# வெள்ளிவிழா மலர்




வெளியீடு

ஜனசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

# ஜனசக்தி

# வெள்ளிவிழா மலர்

## ஜனசக்தி சிக்கனகடனுதவி கூட்டுறவுச் சங்கம்

1992-2017

மயிலணி - சுன்னாகம்

# நூல் விபரம்

நூல் : ஜனசக்தி வெள்ளிமலர்

பிரதிகள் : 200

மொழி : தமிழ்

பக்கங்கள் : XII+36

தாள் அளவு : B5

அச்சுப்பதிப்பு : முத்து பிறின்டேர்ஸ்
இல.122, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
தொ.பே: 077 8038629



# உடுவில் பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்குடாநாட்டில் வலிகாமம் தெற்கு பிரதேசம் பல்வேறு சமூக, சமய, பொருளாதார கலை, கலாச்சார நிறுவனங்கள் தன்னகத்தே கொண்டு மேன்மை பெற்று விளங்குகின்றது. இங்குள்ள சமூக அமைப்புகளுள் ஒன்றாக மயிலணி வடக்கு சுன்னாகத்தில் இயங்கிவரும் "ஜனசக்தி கடனுதவு கூட்டுறவு சங்கம்" உள்ளது. இது 1992 இல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளிவிழாக்காணுமளவிற்கு வலுப்பெற்றுள்ளமை பாராட்டுக்குரியதாகும். இந் நிறுவனத்தின் வெள்ளிவிழாச்சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மயிலணிப்பிரதேசத்திலுள்ள பலரையும் ஒன்றிணைத்துக் குறிப்பாக பெண்களைக் கூடிய அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கின்ற வகையில் இவ்வமைப்பிற்குத் தனிச்சிறப்புண்டு. கிராம மக்களின் வளர்ச்சியை இலக்காகக்கொண்டு பலதிட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். 150000/- ரூபா கடன் வழங்குமளவிற்கு இதன் நிதி நிலைமை காத்திரமானதாக உள்ளதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். தலைவரின் வழிகாட்டலில் பலரது கூட்டு முயற்சியாக கூட்டுப்பொறுப்பாக கடந்த 25 வருடங்கள் செயற்பட்டு பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கமைய மக்களின் தேவையறிந்து தம்மாலான சேவைகளை இன்றுவரை இவர்கள் ஆற்றிவருகின்றனர் என அறியமுடிகின்றது. எவ்வாறாயினும் இந்நிறுவனத்தின் பணிகள் மேலும் விரிவுபெற வேண்டும், இதனால் புத்தாக்கங்கள் மலரவேண்டும், இக்கிராம மக்கள் ஊக்கமும் உறுதியும் நம்பிக்கையும் பெறவேண்டும். இவ்விலக்கினையடைய இறைவனின் திருவருள் நிறைவாகக் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு இந்நிறுவன சமுகத்தினர் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**- திருமதி மதுமதி வசந்தகுமார் -**
பிரதேச செயலாளர்,
வலி. தெற்கு பிரதேச செயலகம்,



## 25வது ஆண்டு விழா நிகழ்வின் மலர் வெளியீட்டுக்கான வாழ்த்து செய்தி

தமிழரின் பாரம்பரியம் மேலோங்கும் சுன்னாகம் பிரதேசத்தில் மயிலணி கிராமத்திலே 25 வருடங்களையும் கடந்து சிக்கன கடன்வழங்கு கூட்டுறவு சங்கமாகச் செயற்பட்டு வருகின்ற ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் 25வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையிட்டும் அதற்காக மலர் ஒன்றினை வெளியிடுவதை யிட்டும் பெருமகிழ்வு கொள்கின்றேன். இம்மலர் வெளியீட்டுக்காக வாழ்த்து செய்தி வழங்கு வதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பொருளாதார நோக்கிலே மக்களின் அன்றாட ஜீவனோபாயத்தைக் கொண்டு நடாத்துவதற்கு நாளாந்தம் பெருமளவான பணம் செலவிடவேண்டியுள்ள நிலையிலே மக்களிடையே சேமிப்பு பழக்கத்தைத் தூண்டி எதிர்கால நலன்கருதி செயற்படுவதற்காக தன்னகத்தே தனது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை அங்கத்தவர்களாக இணைத்து கூட்டுறவு விழுமியங்களிற்கேற்ப மிகவும் திறமையான முறையிலே இந்தச் சங்கம் செற்படுவது சவால்கள் மிகுந்த செயற்பாடாகும்.இதுவொரு வரலாற்றுச் சாதனை என்பதனை மறுப்பதற்கில்லை.

ஒவ்வொரு அங்கத்தவர்களும் பொதுவான கட்டுப்பாட்டுடன் இணக்கமான நிலையிலே சங்கத்தை வழிநடத்த ஒத்துழைப்பு வழங்கிவருவதைப் பராட்டுகின்றேன். இத்தகைய செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு சங்கத்திற்கு காலத்துக்கு காலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற இயக்குனர் சபையும் ஒரு பொருத்தப்பாடுடையதாகவும், நிர்வகிக்கும் ஆளுமையும், ஒத்திசைவான போக்குடையதாகவுள்ளதும் பெருமைக்குரிய விடயமாகும். மேலும் தொடர்ந்து சங்கமானது வளர்ச்சிபெற எனது சேவைக்காலத்தில் அனைத்து ஒத்துழைப்புக்களும் கிடைக்கும் என்பதோடு மலர் வெளியீடு சிறப்படைய வாழ்த்துவதோடு தொடர்ந்து கூட்டுறவு கொள்கைகளினைப் போர்வையாகக் கொண்டு செயற்பட எனது வாழ்த்துக்கள்.

**- பொ. மோகன் -**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



# யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவரின் ஆசிச்செய்தி

யாழ்மாவட்ட.சி.க.கூ.சசமாசத்தின் உடுவில் பிராந்திய சபையின் மயிலணி வடக்கு ஜனசக்தி சி.க.கூ சங்கத்தின் செயற்பாடுகளைக் காட்டும் முகமாக தனது வெள்ளி விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கூட்டுறவுக் கொள்கைகளை தமது செயற்பாட்டில் முழுமையாகக் கடைப்பிடித்து வந்த சங்கங்கள் ஐக்கிய நாணய/சி.க.கூ சங்கங்களேயாகும். இந்த வகையில் இச்சங்கமானது 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுத் தனது சேவையினை வழங்கி அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திற்கு முழுமையாக பங்களிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை சமாசத்தில் பெற்ற வழங்கி வருவதுடன் அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவித்தல், கூட்டுறவாளர்களைக் கௌரவித்தல் போன்ற சேவைகளை செய்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இச்சங்கமானது பரிசூதிய திட்டம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருவதுடன் சமாசத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்களுக்கும் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இச்சங்கமானது பொன்விழா, வைரவிழா, பவளவிழா போன்றவற்றை சிறப்பாக அப்பிரதேச கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் மிளிர்ந்து சேவையாற்ற எல்லாம் வல்ல அண்ணமகேஸ்வரரை அருள்பாலிக்க வேண்டி வாழ்த்தி வரவேற்கின்றேன்.

**- திரு.செ.இலகுநாதன் -**
தலைவர்,
யாழ்.மா.சி.க.கூ.ச.சமாசம்



# வெள்ளிவிழா வாழ்த்து

மயிலணி வடக்கு, சுன்னாகம் ஜனசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் தனது இருபத்தைந்து ஆண்டுப் பணியினை நிறைவு செய்தமை பாராட்டுக்குரியது. அதனையொட்டி அவர்கள் வெளியிடுகின்ற வெள்ளிவிழா மலருக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்கள் பணி மேலும் சிறக்க எமது ஆசியினையும் வழங்குகின்றோம்.

இச்சங்கம் 121 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதும் 02 மில்லியனுக்கு அதிகமான சேமிப்பினையும், அதிலும் சிறப்பாக 95 வீத பெண் அங்கத்தவர்ளைக் கொண்டுள்ளதும் ஓர் முன் மாதிரியாகவுள்ளது. பெண்ணியல் பற்றிப் பேசப்படும் இக் காலத்தில் பெண்களாலும் சாதனை படைக்க முடியும் என்பதற்கு இச் சங்கம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது வரவேற்கத்தக்கது.

இச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு ஒன்றரை இலட்சம் வரையிலான கடன் வழங்க முன்வந்திருப்பதனைப் பயன்படுத்தி அங்கத்தவர்கள் தமது வாழ்வாதாரத்தை வளர்த்துக் கொள்ள முன்வரலாம்.

"மீண்டும் அவர்கள் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்"

**- சி.குமாரவேல் -**
தலைவர்,
ப.நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்.



# 25வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு மலர் வெளியீட்டு வாழ்த்து செய்தி

சுன்னாகம் பிரதேசத்தில் மயிலணி வடக்கு என்னும் கிராமத்திலே தேவைகளின் அடிப்படையில் ஒன்றுபட்டு 1992ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கமானது,தற்போது25வதுஆண்டுநிறைவுவிழாவினை கொண்டாடுகின்றது. கூட்டுறவு அமைப்பின்வெற்றியானது ஒற்றுமையிலும், கட்டுப்பாட்டிலுமே பெருமளவில் தங்கியுள்ளது. அந்த அடிப்படையில் 25 ஆண்டுகாலம் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை நோக்கும்போது, சங்கத்தின் அங்கத்தவர்கள் எந்த அளவிற்கு ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும் இயங்கி வருகின்றார்கள் என்பதற்கு சான்றாகும். இதற்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதுடன், 25வது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீட்டுக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 25வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் இந்த மலரானது, சங்கத்தின் செயற்பாடு களையும், கூட்டுறவின் தேவையையும், நன்மைகளையும் எடுத்தியம்பி, மேலும் இக் கூட்டுறவுச் சங்கத்தினை வளர்ச்சியடையச் செய்து, அங்கத்துவ குடும்பங்களின் பொருளாதாரமும், கல்வி, கலாச்சாரமும் மென்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

- பா.பாலரவி -
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
யாழ்ப்பாணம்.



# யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

மயிலணி வடக்கு ஜனசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கம் சிறந்த கண்ணியமான தலைமைத்துவமும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பின் கீழும் மிளிர்ந்த இச் சங்கம் வெள்ளிவிழா காணும் இவ் வேளையில் வெளியிடப்படவுள்ள வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மனித தேவைகளை நிறைவு செய்ய ஆவல் கொண்டவரின் நற்சிந்தனையில் பல அமைப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த வகையில் றோபேட் ஓகன்ரின் சிந்தனை யில் வலுவிழந்த மக்களின் வாழ்வை வலுவூட்டவல்ல கூட்டுறவு அமைப்பானது தோற்றம் பெற்றது. "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்னும் முதுமொழிலுக்கு அமைய மயிலணி வடக்கு ஜனசக்தி சி.க.கூ.சங்கம் அப் பிரதேசத்தில் உள்ள அங்கத்தவரின் வாழ்வாதாரத் தேவைகளை மேம்படுத்தும் நோக்கத்தில் கூட்டுறவின் மூலம் அங்கத்தவரை இணைத்து அப் பிரதேச மக்களிற்கு உன்னதமான சேவைகளை வழங்கி வருகின்றது.

சமாசம் கடந்த காலங்களில் இச் சங்கத்திற்கும், இப் பிராந்தியத்தில் உள்ள சி.க.கூ. சங்கங்களிற்கும் பல் வேறுபட்ட சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியும் கடன்களை வழங்கியும் வருகின்றது சிறப்புற இச் சங்கம் வளர வேண்டும் என உதவிக்கரம் நீட்டி சமாசம் செயலாற்றி வருகின்றது. சிக்கனம், சேமிப்பு பழக்கங்களை அங்கத்தவர் மத்தியில் ஊக்கப்படுத்தி அங்கத்தவர்களிற்கு சிறந்த வழிகாட்டலுடன் சிறந்த நிர்வாகிகளையும் உருவாக்கி வருகின்றது. மயிலணி வடக்கு ஜனசக்தி சி.க.கூ.சங்கம் சமாசத்தின் செயற்பாடுகளில் சங்க உறுப்பினர்களும்,தலைமையும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இச் சங்கம் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை காட்டி சிறந்த கலை, கலாச்சார விழுமியங்களை விருத்தி செய்தும் வருவது கண்கூடு கிராமிய மட்டத்தில் மக்களின் சமூக பொருளாதார, கலாச்சார மேம்பாட்டிற்கு உழைக்கவல்ல ஒரு அமைப்பாக மயிலணி வடக்கு ஜனசக்தி சி.க.கூ.சங்கம் திகழ்கின்றது.

சங்கத்தின் அங்கத்தவர்கள் நிர்வாகிகளைப் பாராட்டி சங்கம் நீண்டு நிலைத்து பல நூற்றாண்டு விழாக்களை கண்டு மக்கள் சேவையில் நிலை பெற எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**- திருமதி கனகாம்பிகை ஜெகராஜா -**
செயலாளர்,
யாழ் மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்.



# வாழ்த்துச் செய்தி

இன்றைய நவீன உலகில் குறிப்பிடத்தக்க பல வளங்களும் பணப் பெறுமதியினைக் கொண்டே அளவிடப்படுகின்றன.ஏனெனில் மனிதகுல முன்னேற்றத்தில் இன்று பொருளாதாரமே கணிசமான பெரும் பங்கு வகிக்கின்றது. இப்போட்டித் தன்மையான உலகத்தில் எமது வாழ்க்கையின் குறிக்கோளினை அடைவதற்கும் அதனை ஸ்திர நிலையில் தொடர்ந்து பேணுவதற்கும் பணம் எனும் கருவி அவசியமாகின்றது. பணத்தினை ஈட்டுவது எளிதல்ல ஈட்டினாலும் கூட அதனைப் பாதுகாப்பதற்கும், சேமிப்பதற்கும் பல்வேறு நிறுவனங்கள் புற்றீசல்கள் போல முளைத்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இவற்றில் ஒன்று தான் எமது பகுதியில் இருக்கின்ற சிக்கன கடனுதவிச் சங்கங்கள். இவை இன்று யாழ்குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் அங்கொன்றும் இங் கொன்றுமாக இருந்தாலும் இருக்கின்ற பகுதி மக்களின் சிக்கனத்தினால் சேமிப்பைப் பெருக்கி அதனூடாகக் கடன்களை வழங்குதனால் வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் நிதிநிறுவனங்களிற்கு எமது மக்களின் பணம் சென்றடையாமல் எமது செல்வம் எம்மி டையே சுழல்வதற்கும், எம்மை வளப்படுத்துவதற்கும் சிறந்தவொரு வாய்ப்பாக அமைகின்றது.

இவ்வாறே எமது மயிலணிவடக்கு ஜனசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கமும் எமது மக்களின் சிக்கனம், சேமிப்பு, கடன்வழங்கு விடயங்களில் குறிப்பிடத்தக்க சேவையினை வழங்கி வருகின்றது. இதனை மட்டுமன்றி எதிர்காலத்தில் தனது அங்கத்தவர்களிற்கு மேலும் பல ஊக்குவிப்பு சேவைகளையும், வறியமாணவர்கள், அங்கவீனர்களிற்கான உதவிகள் போன்றவற்றை வழங்கி இப்பிரதேச மக்களின் வாழ்விலும், வளத்திலும் துணைநிற்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**- பிரதீப்ரத்னகுமார சுஜந்தி-**
கிராம உத்தியோகத்தர்
சுன்னாகம் நகர் வடக்கு J/195



# யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுசங்க சமாச உடுவில் பிரதேச வெளிக்கள அலுவலரின் வாழ்த்துச் செய்தி

மயிலணி வடக்கு ஜனசக்தி சி.க.கூ.சங்கமானது 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்த வேளை நாட்டின் சூழ்நிலை காரணமாக செயல் இழந்து காணப்பட்டது. மீண்டும் திரு.சி.தர்மலிங்கம் அவர்கள் சமாசத்துடன் தொடர்புகொண்டு 2007ம் ஆண்டு இச்சங்கத்தினை யாழ்மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாக புணரமைக்கப்பட்டு புதிய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. கூட்டுறவு திணைகளத்தில் சங்கம் தொடர்பான ஆவணங்களும் பெற்று வழங்கப்பட்டன. இச் சங்கமானது ஆரம்பத்தில் தனியார் கடன் எல்லை ரூ.3000 ஆக இருந்து, இவ் வெள்ளி விழா காணும் வேளையில் தனியார் கடன் எல்லை 150000 ரூபாவாக உயர்த்தி பெருவிருட்சமாக தொழில்பட்டு கிராம மக்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றது. மேலும் புலமைபரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவித்தல், சமூக சேவைகள் செய்தல் போன்றனவும் சமாசத்தினால் நடத்தப்படுகின்ற எல்லா செயல்பாடுகள்,விழாக்கள், பயிற்சி வகுப்புகள் அனைத்திலும் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

இச் சங்கத்தை புனரமைக்கும்போது வெளிக்கள அலுவலராக கடமையாற்றினேன். வெள்ளிவிழா காலத்திலும் வெளிக்கள அலுவலராக கடமையாற்றுயாற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.புனரமைப்பு செய்யும் காலத்தில் இக்கிராமம் வளர்ச்சி குன்றி காணப்பட்டது. இக்காலத்தில் சங்கமும் வளர்ச்சியடைந்தது மட்டுமல்லாமல் கிராமமும் வளர்ச்சி அடைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது மேலும் இச்சங்கமானது பொன்விழா, பவளவிழா போன்ற விழாக்களை நடத்தி இக்கிராமத்திற்கு கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் மிளிர வாழ்த்துகின்றேன்.

**- திருமதி கௌரிதேவி கடம்பானந்தன் -**
யாழ் மாவட்ட சி.க.கூ.ச.சமாச
உடுவில் பிராந்தியம்



# சிக்கன சங்க தலைவரின் வாழ்த்துரை

ஜன சக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் தனது 25வது ஆண்டு பணி நிறைவை ஒட்டி வெளியிடும் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்து செய்தியை வெளியிடுவதில் மகிழ்வுறுகிறேன்.

மனித இனம் பரிணாம வளர்ச்சி ஊடாக தோற்றம் பெற்ற ஆதிகாலத்திலேயே மக்கள் கூட்டுறவாக வாழ்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. கூட்டாக ஒன்று கூடி வாழ்ந்து, கூட்டாக உணவுதேடி, கூட்டாக உண்டு, கூட்டாக மகிழ்ந்து வாழ்ந்தனர். அவர்களிடம் ஏற்றத் தாழ்வுகளோ, உயர்வு தாழ்வோ, பேதங்களோ இருக்கவில்லை. மனித இனம் தனது வளர்ச்சிப்போக்கில் பல்வேறு சமுதாயமாற்றங்களுடாக வாழ்ந்து வந்துள்ளது ஆதிகாலத்தில் புராதன பொது உடமை சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் கூட்டம் ஆண்டான் அடிமை சமுதாயம், நிலப்பிரதிநிதித்துவது சமுதாயம் ஊடாக இன்றைய முதளாளித்துவ சமுதாய அமைப்பில் வாழ்ந்து வருகின்றனர்.ஒன்றாக வாழ்ந்த மனித இனம் குடும்பம்,சொத்து, தேசம், மதம், நிறம், இனம்,மொழி,சாதி, வர்க்கம் என பல்வேறு குழுக்களாக ஆதிக்க சத்திகளால் பிரிக்கப்பட்டு வாழ வைக்கப்பட்டுள்ளார்கள் இதனால் முதளாளி தொழி ளாளி,ஆண்டான் அடிமை,ஏழை பணக்காரன் என பிரிவுகள் தோன்றி சமுதாயத்தில் சமத்துவமின்மை வளர்ந்து வருகின்றது.

இச் சமுதாய அமைப்பில் பணமே முதன்மை பெறுகின்றது. அதை தேடுவதற்கு மனித மனம் எவ்வழியையும் பின்பற்ற தூண்டுகிறது. இதனால் கூட்டு முயற்சிகள் ஊழல் மலிகின்றன. கிராமிய மக்களிடையே இருந்த கூட்டு குடும்ப வாழ்க்கை சிதைவடைகிறது. கூட்டுறவாக செயல் ஆற்றும் பண்பு குறைவடைந்து செல்கின்றது.ஒவ்வொரு குடும்பமும் தாம் தாம் பொருளாதாரத்தில் முன்னேறவேண்டும் என்ற உணர்வுடன் கடுமையாக செயல்படுகின்றனர். இதனால் இளம் சந்ததியினர் பொதுத்துறையில் பணி செய்ய முன் வருவதில்லை வருவோரும் சில வருடங்களுடன் நின்று விடுகிறார்கள்.

நான் 1975ம் ஆண்டு ஆவணிமாதம் இக்கிராமத்தில் வாழத் தொடங்கினேன். 1978 ம் ஆண்டு தொடக்கம் ஜனசக்தி சனசமுக நிலையத்தில் பொறுப்பு எடுத்து செயல்பட தொ டங்கினேன்.அன்றில் இருந்து இன்று வரை கிராமத்தில் உள்ள பொது அமைப்புகள் எல்லாவற்றுடன் இணைந்து செயல் ஆற்றியுள்ளேன். கடந்த 40 வருட என் வாழ்வில் பலவற்றை கற்றுள்ளேன். மிகவும் ஒற்றுமையான மக்கள் கூட்டம் ,பண்புள்ள மக்கள், பிரச்சனையென்றாலும்பெரிதுபடுத்தாது இணங்கிப்போகும் குணமுள்ளவர்கள், கூட்டுமுறையில் செயல்படுவதில் ஆர்வமுள்ளவர்கள்.இவர்கள் தங்களுக்குள்ளேயே குழுக்களாக சேர்ந்து நிதி சேர்த்து சங்கமாக ஒவ்வொருவருக்கும்வழங்கும் முறையை நீண்டகாலமாக செயல்படுத்தி வருகின்றனர் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருவருக்கும் குறித்த திகதியில் நிதி சேகரித்து வழங்கி வருகின்றனர். இப்படி பல குழுக்கள் வெவ்வேறு திகதிகளில் இங்கு இயங்குகின்றன. இதனால் பல குடும்பங்கள் தங்கள் தேவைகளை

நிறைவு செய்கின்றனர். இந்நிலையில் தான் பெண்களால் சிக்கன சேமிப்பு சங்கம் தொடங்கப்பட்டது. அவர்களே அதனை வளர்த்தனர் அவர்களால் தான் தங்கள் குடும்ப செலவை செலவிட்டு மீதியை சேமிக்க முடியும் கடன்களை ஒழுங்காக கட்டமுடியும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக சங்கம் இயங்கியது என்றால் இவர்கள் தான் காரணம் நிர்வாகிகளினதும் உறுப்பினர்களின் தன்னலமற்ற, அர்ப்பணிப்புடைய, கூட்டு சேவை ஊடாக சங்கம் வளர்ச்சியடைந்தது உள்ளானும் இல்லானும் இல்லாத சமுதாயத்தை நோக்கி, சமத்துவம், சகோரத்துவம், சமதர்மம் ஆகிய பண்புகளை நிலைநிறுத்தி கூட்டுறவு சமுதாயம் ஒன்றை நோக்கி நடைபயில்வோம் கிராமத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்யும் அமைப்பாக சங்கத்தை கட்டி வளர்ப்போம். வாழ்க ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம்

நன்றி

**- சி.தர்மலிங்கம் -**
தலைவர்



# தலைமைத்துவமும் கூட்டுறவும்

இன்று அதிகளவில் பேசப்படும் விடயங்களில் ஒன்றாக தலைமைத்துவம் காணப்படுகின்றது.

மனிதனுடைய வளர்ச்சியுடன் தேவைப்படுவதான பல்வேறு அம்சங்கள் மனிதனால் மேம்படுத்தப்படுகிறது. அத்தகைய மனித சமுதாய மேம்பாட்டின் அம்சங்களில் ஒன்றாக தலைமைத்துவமும் அது தொடர்பான கற்கைகளும், செற்பாடுகளும் விரி வடைந்து வருகின்றன. தலைமைத்துவம் பற்றிய ஆய்வுகளையும் அது பற்றிய கோட்பாடுகளையும் பல்வேறு ஆய்வாளர்கள் மேற்கொண்டுள்ளனர். தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்காலத்திலும் இது தொடரும். ஏனெனில் தலைமைத்துவமும் அதன் அபிவிருத்தியும் மனிதவள அபிவிருத்தியுடன் இன்றியமையாத ஒன்றாகும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தலைமை தலைமைத்துவம் பற்றிய ஆய்வாளர்களின் சில கருத்துக்களையும் அது கூட்டுறவுத்துறைக்கு எத்துணை முக்கியத்துவம் பெற்றது என்பதையும் ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கூட்டுறவு இயக்கம் சிறந்த மனித விழுமியங்களையும், பொருளாதார வளர்ச் சிக்கான சிந்தனைகளையும் உள்ளடக்கிய பாரிய விருட்சமாகும்.கூட்டுறவின் பெறுமதிகளை நன்கு புரிந்து கொண்டு கூட்டுறவுக்கான சேவையை நல்கும்போது தற்பொழுதைவிட மேலும் பல பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.விசேடித்த பண்புகளை உடைய கூட்டுறவு இயக்கமானது இன்றைய போட்டிப் பொருளாதார சூழ்நிலையில் போட்டியிட்டு வளர வேண்டிய தேவை உள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் அதன் நிலைத்த அபிவிருத்திக்கும் கூட்டுறவுத் தலைமைத்துவத்தின் அபிவிருத்தி மிகவும் முக்கியமானதே.

## தலைமைத்துவம் என்றால் என்ன?

ஒரு கடமையைச் செய்யும் பொருட்டு நியமிக்கப்படும் அல்லது உருவாக்கப்படும் குழுக்களின் உறுப்பினரை வழிகாட்டுவதற்கும் அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அக்குறிப்பிட்ட வேலையை செய்து முடிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் ஓர் செயல்முறையே தலைமைத்துவமாகும்

எப்பொழுதும் தலைவன் தனக்குக் கீழ் இருக்கும் உதவியாளர்களை அல்லது பின்பற்றுவோரைத் தான் விரும்பியவாறு தொழிற்பட வைப்பான். இது ஒரு நேர்க்கணிய செல்வாக்கு உள்ள தலைவனால் ஆற்றப்படக்கூடியது. இது ஒருபோதும் எதிர்க்கணிய செல்வாக்காகமாறக்கூடாது. எப்பொழுதுமே தலைவன் குழுவில் உள்ளவர்களைவிட கூடியவலுவினைக் கொண்டிருப்பாராயின் அதன் ஊடாக அவன் ஏனையோர் மீது நேர்க்கணிய செல்வாக்கு ஒன்று செலுத்தக் கூடியவனாக இருப்பான்.

நாம் நல்லதொரு தலைமைத்துவ சூழலை பார்க்க வேண்டுமாயின் அங்கு சிறந்த ஒரு வழிகாட்டலை வழங்கக்கூடிய தலைவரையும், அவரது வழிகாட்டலை ஏற்று பின்பற்றக்கூடிய குழுவினரையும் கொண்டதாக வேண்டும். இதில் ஏதாவது ஒன்று சாத்தியப்படாதவிடத்து தலைமைத்துவத்தை நாம் பார்க்க முடியாது.

## தலைமைத்துவ இயல்பு (Leadership Style)

தலைவன் கொண்டிருக்கும் அதிகாரங்களையும் உதவியாளர் கொண்டிருக்கும் சுதந்திரங்களையும் மையமாகக் கொண்டதே தலைமைத்துவ இயல்பாகும். அடிப்படையில் இதனை இரு பிரிவுகளுக்குள் கொண்டு வரலாம்.

01) அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம்

02) ஜனநாயக மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம்

அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்தில் தலைவன் பெருமளவு அதிகாரங்களை வைத்துக்கொண்டு உதவியாளர்களுக்கு மிகக் குறைந்த சுதந்திரங்களை வழங்குவான். தீர்மானங்களை தலைவன் தானே எடுத்து அதனை நிறைவேற்றுமாறு குழுவிற்கு கட்டளையிடுவான். ஆனால் ஜனநாயக தலைமைத்துவத்தில் பெருமளவு சுதந்திரங்களை உதவியாளர் பெற்றுக் கொள்ள முடிவதோடு, தலைவன் குறைந்த அதிகாரங்களையே கொண்டிருப்பான். இங்கு உதவியாளர்களது ஆலோசனை பெற்றபின்பே தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

ஜனநாயக மற்றும் அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவ வகையை மேலும் நான்கு வகையாகவும் வகைப்படுத்தலாம்.

01) பணிக்கும் இயல்பு (Tells Style)

02) திணிக்கும் இயல்பு (Sells Style)

03) கலந்தாலோசிக்கும் இயல்பு (Consultative Style)

04) இணையும் இயல்பு (Participative Style)

இங்கு முதலிரண்டும் அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்தையும் பின்னைய இரண்டும் ஜனநாயக வகைப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்தையும் குறிப்பதாகும். பணிக்கும் இயல்பில் தலைவன் தானே தீர்மானத்தை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துமாறு கட்டளை பிறப்பிப்பான். ஆனால் திணிக்கும் இயல்பில் தலைவன் தீர்மானத்தை எடுத்தபின் அதிலுள்ள சந்தேகங்களைக் கேட்கும்படி அனுமதிப்பான். இருப்பினும் தீர்மானம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

கலந்துரையாடும் இயல்பில் ஊழியர்களிடம் ஆலோசனை பெற்ற பின்பே தீர்மானம் எடுக்கப்படும். இணையும் இயல்பில் தலைவன் ஊழியர்களில் ஒருவனாக இணைந்து தீர்மானம் எடுப்பதிலும், செயற்படுத்துவதிலும் பங்கு கொள்வான்.

# தலைமைத்துவப் பண்புகள்

ஒரு தலைவன் தனது நிறுவன நோக்கை அடையும் பொருட்டு ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்று செயற்பாடுகளை வழிநடத்த வேண்டியவனாக இருப்பான். அவ்வாறு ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டுமாயின் ஒவ்வொரு தலைவர்களும் அதற்கென சிறப்பான ஆற்றல்களை தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய ஆற்றல்களே தலைமைத்துவ பண்புகளாகும்.

இவ்வாறு ஒரு தலைவருக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் பண்புகள் பின்வரும் நான்கு அம்சங்களைச் சார்ந்தவையாக இருக்கும்.

01) உடலியற் பண்புகள் (Physical Traits)
02) சமூகப் பண்புகள் (Social Traits)
03) ஆளுமைப் பண்புகள் (Personality Traits)
04) தனிப்பட்ட பண்புகள் (Personal Traits)

பொதுவாக ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும் எல்லாப் பண்புகளும் கூட்டுறவு தலைவர்களுக்கும் இருக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாது. அத்தகைய தலைமைத்துவ பண்புகளாக பின்வருவனவற்றைப் பார்க்க முடியும்.

01) தூரநோக்குடையவராக இருத்தல்
02) நிறுவன இலக்கை அடைவதில் ஆர்வம் உள்ளவராயும் அதற்காக உழைப்பவராகவும் இருத்தல்
03) நிறுவனத்தின் எதிர்காலத்தை சிறந்த முறையில் முன்னுணர்ந்து பொருத்தமான திட்டமிடலை மேற்கொள்ளக் கூடியவராக இருத்தல்.
04) பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருத்தல்
05) சிறந்த தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஆற்றல்களைக் கொண்டவராக இருத்தல்.
06) மனித நடத்தையினை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பினைக் கொண்டவராக இருத்தல்.
07) பேச்சாற்றல் கொண்டவராக இருத்தல்.
08) பக்கச் சார்பில்லாது நடுநிலையாளராக இருத்தல்.
09) சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டவராக இருத்தல். அதாவது மனித தொடர்பு தேர்ச்சித் திறன் பெற்றவராக இருத்தல்.
10) தான் சார்ந்த துறை தொடர்பான பூரண அறிவினைக் கொண்டவராக இருத்தல்.
11) நிறுவனம் தொடர்பாக சிறந்த கருத்துத் தேர்ச்சித்திறன் உள்ளவராக இருத்தல்
12) விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையைக் கொண்டிருத்தல்.
13) ஆபத்துக்களை ஏற்கும் ஆற்றல் கொண்டவராக இருத்தல்.
14) குழுவினரைத் தூண்டக்கூடியவராகவும் ஆர்வம் உடையவராகவும் இருத்தல்.

15) நம்பகத் தன்மை உடையவராகவும் இருத்தல்.

16) தனிப்பட்ட ரீதியாகவோ, நிறுவன ரீதியாகவோ குழுவினிடையே ஏற்படக்கூடிய முரண்பாடுகளை முகாமை செய்யக் கூடியவராக இருத்தல்.

17) நேர முகாமைத்துவத்தை முன்னுதாரணமாக பின்பற்றுபவராக இருத்தல்.

18) உருவாக்கும் இயல்புள்ளவராக இருத்தல்.

19) தனது கடமைப் பொறுப்புக்கள் தொடர்பில் தெளிவான பார்வையும், புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் அவாவும் உள்ளவராகவும் இருத்தல்.

20) மற்றவர்களின் புறக்கணிப்பைக் கண்டு அஞ்சாதவராகவும் ஏற்படும் பிழைகளை முன்னேற்றுவதற்கான படிக்கற்களாகக் கொள்ளும் மனப்பான்மை உடையவராகவும் இருத்தல்.

21) போட்டிக்கு ஈடு கொடுக்கக் கூடியவராக, எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடியவராக இருத்தல்.

22) பலரது கருத்துக்களையும் எடுத்து தகுந்த கருத்தொன்றை தேர்வதற்கான ஆற்றல் உடையவராக இருத்தல்.

23) ஊழியர்களின் செயல்திறனை சிறந்த முறையில் மதிப்பீடு செய்யவும் அவர்களுக்குப் பொருத்தமான ஊக்குவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முடியுமானவராக இருத்தல்.

24) தனது பதவிக்காலத்தில் நிறுவனத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களை மதிப்பிடவும், சுயமதிப்பீட்டை மேற்கொள்ளவும் தன்னைத் தேவையான இடத்து திருத்திக் கொள்ளவும் முடியுமானவராக இருத்தல்.

25) நிறுவனத்தின் திட்டங்களை சிறந்த முறையில் அமுல்படுத்தக் கூடியவராக இருத்தல்.

## கூட்டுறவு நிறுவனங்களின் தலைமைத்துவம்

"உலக மக்கள் அனைவரையும் கூட்டுறவு அமைப்பில் இணைத்து உலகை ஓர் கூட்டுறவு சமுதாயமாக கட்டியெழுப்புதல்" என்ற உலகளாவிய ரீதியிலான பாரியதொரு தூரநோக்கை கொண்டதே கூட்டுறவு நிறுவனமாகும்.ஜனநாயக நிர்வாகமும், கட்டுப்பாடும் உடையதான இவ்வமைப்பு அங்கத்தவர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படும் தலைமைத்துவத்தின் வழிநடத்தலிலேயே தங்கியுள்ளது. எமது பிரதேச கூட்டுறவு அமைப்புக்களை பொறுத்தவரை இங்கு சிறந்த ஒரு கூட்டுறவு தலைமைத்துவத்திற்கு பெரும் பஞ்சமே நிலவுகிறது என்றால் அதில் மிகையேதும் இல்லை.

தலைவர்கள் பிறக்கின்றார்கள் என்ற நிலைமாறி உருவாகினார்கள் என்ற நிலையில் இன்று பல்வேறு துறைகளும் தத்தமது துறைக்கேற்ற தலைவர்களை உருவாக்கி வளர்ச்சியடைந்து வருவதை நாம் பார்க்கின்றோம் எனினும் கூட்டுறவுத் துறையில் தலைவர்களை உருவாக்கும் முயற்சி மிக அரிதாகவே உள்ளது. கிராமிய

மட்டத்திலான மக்களின் ஒன்றிணைப்பினால் செயற்படும் கூட்டுறவு இயக்கமானது மக்கள் சக்தியை ஒன்றினணத்து தன்னைப் பலப்படுத்தத் தவறி வருகின்றது.

கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்கள் இந்நிலையை மாற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நோக்கத்தின்பால் கூட்டுறவை வழிநடத்தி அதன் அபிவிருத்தியை நடைமுறைச் சாத்தியமாக்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற கடமைப்பட்டுள்ளனர்.

## தலைமைத்துவப் பயிற்சி

கூட்டுறவு தலைமைத்துவம் ஆற்ற வேண்டியுள்ள தனது கடமைகள் பொறுப்புக்களை செயல்திறன் வாய்ந்ததாக அமைத்துக் கொள்வதற்கு கூட்டுறவுத் துறையில் பதவி வகிக்கும் எல்லா மட்ட தலைவர்களும் போதிய தலைமைத்துவ பயிற்சியை பெற்றவர்களாக இருக்க வேண்டும். கிராமிய மட்டங்களிலுள்ள சிறிய அளவிலான ஐக்கிய நாணய சங்கங்கள், கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவையாக இருந்தாலென்ன பாரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலென்ன அங்கத்தவர்கள், கிளைக்குழு பொதுச்சபை, பணிப்பாளர் சபை என எல்லாப் பதவிகளை வகிப்பவர்களும் சிறந்த தலைவர்களாக செயற்பட பொருத்தமான பயிற்சிகளை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

கிராமிய மட்ட தலைவர்களில் இருந்தே ஏனைய சங்க பிராந்திய, மாவட்ட மட்டங்களிற்கு கூட்டுறவுத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். எனவே கிராமிய மட்டத்தில் தலைமைத்துவ அபிவிருத்தியை மேற்கொள்ள பொருத்தமான கல்வித் திட்டங்களை கூட்டுறவுநிறுவனங்கள் தயாரித்து பயிற்சிகளை வழங்க போதுமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

முன்னைய காலங்களில் ஒரு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் அறிந்திருக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய பயிற்சி ஒன்றை வழங்கி அதில் அங்கத்தவர்கள் பங்கு பற்றி பூரணப்படுத்திய பின்பே சங்கங்கள் பதிவு செய்யும் நடைமுறை இருந்து வந்தது. இது இத்துறை கல்விப் பயிற்சிக்கு அளித்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

கல்வி பயிற்சி, தகவல் திரட்டல் என்ற விடயம் ஏழு கூட்டுறவுக் கொள்கையில் ஒன்றாக காணப்படுகின்றது. ஏனைய துறைகளைப் போன்று கூட்டுறவுத் துறையும் கல்வி பயிற்சிக்கு முக்கியத்துவம் வழங்கி வருகின்றது. இவ்விடத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் கூடுதல் அக்கறை செலுத்தி நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமானதே.

கூட்டுறவு நிறுவனங்களின் தலைமை ஆரோக்கியமான எதிர்காலத்திற்கும், அதன் நிலைத்த அபிவிருத்திக்கும் ஏற்றதான திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைக்

கிடவும், கூட்டுறவு நிறுவனங்களின் பௌதீக, மற்றும் மனித வளங்களை உச்சப் பயன் பாட்டிற்கு இட்டுச் செல்லவும் முடியுமானதாய் இருத்தல் வேண்டும்.

தனிப்பட்டவர்களின் நலனை விட நிறுவன நலனிற்கு முக்கியத்துவம் வழங்கி, வேலைக்குப் பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்த்து அவர்களை பயிற்றுவித்து, ஊக்குவித்து வேலை கொள்வதோடு, காலத்திற்குக் காலம் பொருத்தமான செயல்திறன் மதிப்பீடுகளை பக்கச் சார்பின்றி மேற்கொண்டு, செயற்திறன் மிக்க பணியாளர்களை இனம் கண்டு அவர்களை ஊக்குவித்து, பொருத்தமான பதவியுயர்வுகளை வழங்கியும், வேலைக்கேற்ற ஊதியத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய திட்டங்களை அறிமுகப்படுத்தியும் சங்கங்களை இலாபகரமாக இயங்க சக்தி வழங்கக் கூடியதாக கூட்டுறவுத் தலைமைத்துவம் செயற்பட வேண்டும்.

மேலும் வளர்ந்து வரும் கல்வி, விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப மாற்றங்க ளுக்கும், உலகின் புதிய பொருளாதார ஒழுங்கிற்கு ஏற்ப நவீன யுக்திகளையும், தந்திரோபாயங்க ளையும் பயன்படுத்தவல்ல ஆற்றல் மிக்க தலைமைத்துவம் உருவாக்கப்படல் வேண்டும். கல்வி, பயிற்சி, தகவல் திரட்டல் நுட்பங்களை விருத்தி செய்து கொள்வதோடு, மேலும் தனது கொள்கைகளில் ஒன்றான சமூகத்தின் மீதான அக்கறை என்பதில் தீவிர அக்கறை கொண்டு செயற்பட கூட்டுறவுத் தலைமைத்துவம் கடினமாக உழைத்தல் வேண்டும்.

கூட்டுறவு நிறுவனத்தின் மீது மக்களின் நம்பகத்தன்மை, பற்று, ஈடுபாடு என்ப வற்றை அதிகரிக்கச் செய்ய அதே நம்பகத்தன்மை,பற்று, ஈடுபாட்டுடன் கூட்டுறவுத்தலைமை செயற்திறனுடனும், விடாமுயற்சியுடனும் கடமையாற்ற வேண்டும். புதிய விடயங்களை அறிதல், அறிவைத் தேடல் எதிர்காலத்திற்கு பொருத்தமானதை உருவாக்கல்,தனது பலவீனங்களை அகற்றுதல், பலத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்தல், அச்சுறுத்தலை வெல்லுதல், கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தல் போன்ற எல்லா விடயங்களிலும் கூட்டுறவுத் தலைமை கவனம் செலுத்தி தனது சமுக, பொருளாதார, கலாச்சார மேம்பாடு என்ற பயணத்தைத் தொடர்வதன் மூலம் "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற மகுடவாக்கி யத்தின் மாண்பை நிலைபெறச் செய்யமுடியும்.

"வளமுடன் வாழ்க கூட்டுறவு"

**திரு.கோ.கௌரிதாசன்**
கல்வி உத்தியோகத்தர்
யா.மா.சி.க.கூ.ச.சமாசம்

# ஜனசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்
# கடந்து வந்த கால் நூற்றாண்டு

ஈழ மணித் திரு நாடின் யாழ் நகரத்தின் வடபால் அமைந்துள்ளது சுன்னாகம் என்னும் சிறு நகரம். சுன்னாகம் மத்திய சந்தை, புகையிரதநிலையம், மின்சாரநிலையம் ஆகியன சூழ அமைந்துள்ளது இந் நகரம் சுன்னாகத்தின் வடகிழக்காக அமைந்துள்ளது மயிலணி என்னும் கிராமம் கல்விப்புலமையில் மேம்பட்டோர் வாழும் கோயில்களும் சோலைகளும் நிறைந்த கிராமம். கிராமத்தின் வட பகுதியில் வசிக்கும் மக்கள் கூட்டம் ஒற்றுமையுள்ளவர்களாகவும்,ஒழுக்க சீலராகவும்,பண்பட்ட மக்களாகவும் காவல் நிலையம் தெரியாதவர்களாகவும் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். இவ் மக்கள் வாழும் நிலைக்கு தெற்காக முருகமூர்த்தி சிவன்,வடலிஅம்மன் ஆலயங்களும் மயிலணி சைவமகா வித்தியாலயமும் மேற்கில் வருசப்புல அம்மன் ஆலயமும் வடக்கில் அண்ணமகேஸ்வரா் ஆலயமும் கிழக்கில் கோட்டைக்காடு அரசினா் ஆரம்ப பாடசாலையும் அணி செய்ய வாழ்விடம் அமைந்துள்ளது. இம் மக்கள் பெரும்பாலும் உடல் உழைப்பை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக கட்டிட துறை சார்ந்த தொழில் துறையிலும், தச்சு தொழிலும், விவசாயத்திலும், வியாபாரத்திலும் ஈடுபட்டு வந்தனர். ஒரு சிலரே அரசதுறையில் பணிபுரிநதனர்.

1950ம் ஆண்டு காலகட்டத்தை ஒட்டி படித்த இளைஞா் மத்தியில் முற்போக்கு சமூக சிந்தனையும், சமூகவிடுதலை உணா்வுகளும் வளரத் தொடங்கின, அக்காலகட்டத்திலே கிராமிய மட்டத்திலே அறிவை வளா்க்க வாசிகசாலைகள் பல கிராமங்களில் தோற்றம் பெற்றன. இம்மக்களும் 1966ம் பிற்பகுதியில் ஜன சக்தி சன சமூக நிலையம் என்ற பொது அமைப்பை உருவாக்கினர். அதனூடாக மக்களை ஐக்கியப்படுத்தவும், அறிவை வளர்க்கவும், மாணவர்களுக்கு கல்வி ஊட்டவும் பாடுபட்டனர். சனசமுக நிலையத்தை தொடர்ந்து இளம் விவசாயிகள் கழகம், இளைஞா் கழகம், சிறுவர் கழகம் ஆகியன தோற்றம் பெற்று தங்கள் தங்கள் துறை சார்ந்து இக் கிராமத்தில் பணிபுரிந்துள்ளன. 1975ம ஆண்டில் முன் பள்ளி ஒன்றையும் அமைத்து பிள்ளைகளின் ஆரம்ப கல்வியையும் ஊட்டி வருகின்றது.

அன்றாட தொழில் மூலம் வருமானம் பெறும் இம்மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவேண்டும் என்ற சிந்தனை சிலர் மத்தியில் வளர்ந்து வந்தது. குறிப்பாக பெண்கள் மத்தியில் சேமிப்பின் தேவை பற்றிய உணர்வு வளர்ந்தது. குடும்பத்தலைவர்கள் உழைத்து வரும் பணத்தில் சிறு பகுதியையாவது சேமித்து தமது பிள்ளைகளின் பிற்கால தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்ததால் அமைப்பு ரீதியாக சேமிப்பு சங்கம் ஒன்றை அமைப்பது என்ற நிலைக்கு வந்தனா். மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் அவ் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தது.

சிக்கன சங்க சமாசத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி அலுவருடன் தொடர்பு கொண்டு சங்கம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டன. 31.03..1992ம் திகதி செவ்வாய்க் கிழமை 2.30 மணியளவில் ஜனசக்தி சனசமுக நிலைய மண்டபத்தில் மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி திருமதி தருமலிங்கம் லோகேஸ்வரி அவர்கள் தலைமையில் ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இந்நிகழ்வில் திருமதி யோகராசா அவர்கள் கலந்து கொண்டு சங்க செயற்பாடுகள் பற்றி அறிவுரை வழங்கினார். இக் கிராமத்தில் அன்று விதைக்கப்பட்ட விதை இன்று வளர்ந்து இருபத்தைந்தாவது ஆண்டை கொண்டாடும் நிலைக்கு வந்துள்ளது.

இக் கூட்டத்தில் தலைவராக திருமதி உ.பாலேஸ்வரியும் உப தலைவராக சி.கௌசல்யாவும் பொருளாளராக திருமதி த.வாசுகியும் செயல்குழு உறுப்பினராக திரு .சி.தர்மலிங்கம், மு.சுனிதா, செ.வசந்தி, த.அனுஷியா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்ட னர். 14.04.1992ம் திகதி கூடிய செயல் குழுக் கூட்டத்தில் செ.வசந்தி அவர்கள் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தில் ஆரம்ப உறுப்பினராக 52பேர் இணைந்து கொண்டனர். இவர்களில் ஆண்கள் 6 பேரே.

சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட மு.சுனிதா, த.அனுசியா ஆகியோர் உறுப்பினராக சேராத காரணத்தால் 27.12.1992ம் ஆண்டு பொதுச் சபைக் கூட்டத்தில் க.தர்சினி, க.ஜெயந்தி ஆகியோர் செயல் குழுவில் சேர்க்கப்பட்டனர். உபதலைவி சி.கௌசல்யா தனது பதவியில் இருந்து விலகிய காரணத்தால் திருமதி சி.செல்வராணி அவர்கள் உப தலைவியாக 19.08.1993ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். பொருளாளர் திருமதி த.வாசுகி விலகிய காரணமாக 28.02.1994ம் ஆண்டு க. சசிகலா அவர்கள் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இந் நிர்வாகம் 07.03.1995ம் ஆண்டுவரை இயங்கியுள்ளது. தொடக்கத்தில் மூன்று பொதுச் சபைக் கூட்டங்கள் சங்கத்தின் துணைவிதிகள் பகுதி பகுதியாக வாசிக் கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டங்களில் முக்கியமாக பங்கு நூறு ரூபாயாகவும், தனியார் கடன் எல்லை மூவாயிரம் ரூபாயாகவும் பொருளாளர் கையிருப்பு இருநூறு ரூபாவாகவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் சங்கத்தின் நிதி ஆண்டு சித்திரை முதலாம் திகதி தொடக்கம் பங்குனி முப்பத்தொராம் திகதி எனவும் தீர்மானிக்கப்பட்டது.மேலும் 28.02.1994ம் ஆண்டு நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் அரசின் புதிய கூட்டுறவு திருத்த சட்ட விதிகளுக்கு அமைய திருத்தப்படவேண்டிய விதிகளை ஒவ்வொன்றாக வாசித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந் நிர்வாகம் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது மாதம் தோறும் உறுப்பினர்களிடையே சேமிப்பை சேகரித்தது. சங்கத்தின் ஐம்பத்திரண்டு உறுப்பினர் களில் நாற்பத்தொன்பது உறுப்பினர்கள் சேமித்துள்ளார்கள். இக்காலத்தில் மொத்தம் இருபத்தி நான்காயிரத்து தொன்நூற்றிஇரண்டு (24092) ரூபாவை சேமித்துள்ளார்கள்.




27.02.2016 அன்று தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை (இன்றுவரை செயற்படுகிறது)




29.03.2014 அன்று தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை

மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்த நடவெடிக்கை எடுக்கப்பட்டது. அறுபத்து மூன்று மாணவர்கள் இத்திட்டத்தில் இணைந்தனர். மொத்தம் ஆறாயிரத்து பதினான்கு (6014) ரூபாவை சேமித்துள்ளார்கள். மேலும் பரிசூதிய திட்டத்திலும் சிலர் இணைந் துள்ளனர்.

இந் நிர்வாகம் ஆரம்பகாலத்தில் ஒழுங்காக கூட்டங்கள் நடைபெற்றன. 1992ம் ஆண்டு 8பொதுச் சபை கூட்டமும் 2நிர்வாக சபைக் கூட்டமும் நடைபெற்றன. 1993ம் ஆண்டு 3பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. 1994ம் ஆண்டு ஒரு பொதுச் சபைக் கூட்டமே நடைபெற்றன.1993ம் ஆண்டு சன சமூக நிலைய நிர்வாகத்திற்கும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு வளர்க்கப்பட்டு மக்களிடையே ஒற்றுமை குலைக்கப்பட்டது. இது கிராமத்தில் இயங்கிய பொது அமைப்புகள் அனைத்தையும் பாதித்தது. இந்நிலை சங்கத்தையும் பாதித்தது.அதனால் செயல்பாடுகள் குறைந்தன.நிர்வாகிகளையும் பாதித்தன பலரும் தங்கள் சேமிப்பை மீள வழங்குமாறு வற்புறுத்த தொடங்கினர். 14.08.1993ம் திகதி நடைபெற்ற பொதுச் சபைக்கூட்டத்தில் சேமிப்பை மீளப் பெறவிரும்புவோருக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் தலைவி உ.பாலேஸ்வரி, செயலாளர் வசந்தி பொருளாளர்களாக கடமைபுரிந்த த.வாசுகி, க.சசிகலா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் சங்கத்தை தொடர்ந்து இயக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டனர். சங்கத்தை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் தலைவர், செயலாளரால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. மயிலணி கிராமத்தில் வேறு சங்கங்கள் உள்ளதால் பதிவு செய்யமுடியாது என கூட்டுறவு அலுவலரால் அறிவிக்கப்பட்டது. 1994ம் ஆண்டில் கூட்டுறவு திணைக்களம் மறுசீரமைக்கப்பட்டு பிரதேசசெயலகங்களுடன் இணைக்கப்பட்டன. உடுவில் பிரதேசசெயலாராக அமரர் ஆ.மகாலிங்கம் ஐயா அவர்கள் கடமை புரிந்து வந்தார்.அவர் இக் கிராமத்தின் பல நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த சேவையாளர்.அவர் எமது சங்கத்தை பதிவு செய்ய நடவெடிக்கை எடுத்தார். சங்கத்தை 25.11.1994ம் ஆண்டு பதிவு செய்து தந்தார் பதிவு இலக்கம் வ /யா /வலி-தெ /01 ஆகும்.

சங்க நிர்வாகிகளும் அங்கத்தவர்களும் பல்வேறு பயிற்சி வகுப்புக்களில் கலந்து நிர்வாக செயல்பாட்டு அறிவை பெற்றனர் கூட்டுறவு அலுவலர்களான திரு.சின்னத்தம்பி, திருமதி செ. அழகேந்திரராசா, திரு.சின்னராசா சிக்கன சங்க சமாச கல்வி உத்தியோகத்தர் நி.லோகேஸ்வரி ஆகியோர் கூட்டங்களுக்கு வருகை தந்து அறிவுரைகள் வழங்கியதை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். சமாச அலுவலரின் ஆலோசனையின் பேரில் சங்கத்தின் சேமிப்பு நிதிகள் அனைத்தும் சமாசத்தில் வைப்பில் இடப்பட்டது.

சங்கத்தின் ஆண்டு பொதுச் சபைக் கூட்டம் 07.03.1995ம் திகதி செவ்வாய்க் கிழமை சங்க தலைவி உ.பாலேஸ்வரி அவர்கள் தலைமையில் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் தலைவராக மீண்டும் உ.பாலேஸ்வரி தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக திருமதி த.லோகேஸ்வரி அவர்களும் பொருளாளராக திருமதி ம.இரதி அவர்களும் செயல் குழு உறுப்பினராக திரு.சி.தர்மலிங்கம் அவர்களும்

தெரிவு செய்யப்பட்டார் இந் நிர்வாகம் யுத்த நிலை காரணமாக இரண்டு மாதத்திற்கு மேல் செயல்பட முடியாமல் போனது. கிராமத்தில் செல்கள் பல விழுந்த காரணத்தால் அடிக்கடி இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. 30.09.1995ம் ஆண்டு முழுமையாக தென்மராட்சி நோக்கி இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. கிராமத்திற்கு மீள வந்து குடியேறியபோதும் நீண்டகாலமாக சங்கத்தை இயக்க முடியாத நிலையே இருந்தது. இடம்பெயர்வின்போது பொருளாளர் ம.இரதி சங்கத்தின் கணக்கு பதிவுகள் அனைத்தையும் தவறவிட்டுவிட்டார் அதனால் சங்க உறுப்பினர்களின் சேமிப்பு விபரங்கள் தெரியாமல் இருந்தது செயலாளர் சி.தர்மலிங்கம் அவர்களிடம் அறிக்கை கொப்பியும், அங்கத்தவர் பதிவேடும், துணைவிதியும்,கோவை ஒன்றும் பாதுகாப்பாக இருந்தது.

22.02.2003ம் திகதி சங்கத்தை புணரமைக்க பொதுச் சபைக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. இககூட்டத்திற்கு யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சமாச வெளிக்கள அலுவலர் திரு.கோ.கௌரிதாசன் வருகை தந்து ஆலோசனைகள் வழங்கி னார் அக் கூட்டத்தில் நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது. தலைவராக திரு.சி.தர்ம லிங்கமும் உப தலைவராக ம.இரதியும், செயலாளராக ச.வதனியும் பொருளாளராக த.வாசுகியும் நிர்வாகசபை உறுப்பினராக த.லோகேஸ்வரி, சி.சுமதி ச.நாகேஸ்வரி த.ஜோதிராணி,இ.கமலாதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அங்கத்தவர்களின் சேமிப்பு விபரங்கள் தொலைந்த காரணத்தால் அவர்கள் சேமிப்பு பணத்தை தருமாறு வற்புறுத்தியதால் சங்கம் தொடர்ந்து செயல்படாமல் போய்விட்டது.

2007ம் ஆண்டு சித்திரை மாதம் திரு.சி.தர்மலிங்கம் அவர்கள் உடுவில் பிராந்திய சிக்கன சங்க தலைவர் திரு.செ.இலகுநாதன் அவர்களின் துணையுடன் யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவு சங்க சமாச தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்களை உடுவில் பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் சந்தித்து சங்கத்தின் புணரமைப்பு சம்பந்தமாக ஆராய்ந்தார். தொடர்ந்து பல முறை யாழ் நகரில் சந்தித்து ஆலோசித்ததின் பிரகாரம் 06.05.2007ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு சங்க உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. திரு.சி.தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் சனசமுக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிக்கன சங்க சமாச தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்களும் வெளிக்கள அலுவலர் செல்வி கௌரிதேவியும் வருகை தந்தனர். சங்கம் தொடர்ந்து இயங்குவதினூடாக உறுப்பினர்க்கும் மக்களுக்கும் கிடைக்ககூடிய நன்மைகள் பற்றி விரிவாக விளக்கினார். இக் கூட்டத்தில் நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது. தலைவராக திரு.சி. தர்மலிங்கம் அவர்களும் உபதலைவராக திருமதி ப.வசந்தி அவர்களும், பொருளாளராக திருமதி சி.ஜெயந்தி அவர்களும் செயல் குழு உறுப்பினராக திருமதி ம.இரதி, திருமதி இ.வதனி, திருமதி ஸ்ரீ.கௌசல்யா, செல்வி வி.நகுலேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் செயலாளராக ஸ்ரீ.கௌசல்யா தெரிவு செய்யப்பட்டார்.

இக் கூட்டத்தில் சமாச தலைவரின் ஆலோசனையின் பேரில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. உறுப்பினர்கள் மாதம் தோறும் நூறு ரூபாவிற்கு மேல் சேமிப்பதென்றும்




24.04.2011 அன்று தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை




05.10.2008 அன்று தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை

கணக்குபதிவேடுகள் தொலைந்த காரணத்தினால் ஒவ்வொரு உறுப்பினரின் சேமிப்பையும் அண்ணளவாக நிர்ணயிப்பதெனவும் கணக்குகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு விலக விரும்பு வோரை விலக அனுமதிப்பதெனவும் மாணவர் சேமிப்பை உறுதிப்படுத்திய பின் மீளளிப்ப தெனவும் தீர்மானிக்கப்பட்டது. சமாசத்தில் சேமிப்பில் வைப்பிலிட்ட 34204 ரூபா வட்டியுடன் சேர்ந்து 103372ரூபா 93 சதமாக வளர்ந்து இப்போது உள்ளதாக வெளிக்கள அலுவலர் தெரிவித்திருந்தார்.

07.05.2007ம் திகதி புனரமைக்கப்பட்ட இச் சங்கம் இன்று வரை தன்னாலான பணிகளை செய்து வந்துள்ளது.07.05.2007ம்திகதி தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் 04.10.2008ம் திகதி வரை இயங்கியது. இக்காலத்தில் சங்கம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நிறைவேற்றியுள்ளது. சங்கம் யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுசங்க சமாசத்தில் உறுப்புரிமை பெறாமல் இருந்தது.17.06.2007ம் திகதி சமாசத்தில் உறுப்புரிமை பெற்றுக் கொண்டது.சங்கம் முன்பு உறுப்பினர்க்கு கடன்வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருந்தது . உறுப்பினர்களின் தேவை கருதி கடன் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.சங்கம் தொடங்கும்போது துனை விதியில் தனியார்கடன் எல்லை 3000/ ரூபா என இருந்தது. அதனை இக்கால தேவைக் கேற்ப மாற்றவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 14.10.2007ம் திகதி சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது அக் கூட்டத்தில் துணைவிதியில் வெளிக்கடன் எல்லை ஒன்பது இலட்சம் ரூபாகவும் தனியார் கடன் எல்லை மூவாயிரத்திலிருந்து முப்பதாயிரம் ரூபாகவும் பொருளாளர் கையிருப்பு இருநூறு ரூபாயிலிருந்து ஐநூறு ரூபாயாகவும் மாற்றம் செய்யப்பட்டது.இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுசங்க சமாச தலைவர் திரு.சு.சிவசுப்பரமணியம் அவர்களும் உடுவில் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.வித்தக கலாநிதி அவர்களும் சமூகம் தந்து கருத்துரை வழங்கினர்.சங்க கணக்கு பதிவேடுகள் தொலைந்ததை அறிந்த கூட்டுறவு அலுவலர் வித்தக கலாநிதி அவர்கள் சங்கம் பதிவு செய்யும்போது சங்கத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு இருக்கும் என தெரிவித்து கூட்டுறவு அலுவலகத்தில் தானாக தேடி எடுத்து பிரதிபண்ணி தந்தார். அக் கணக்காய்வு அறிக்கையில் அங்கத்தவர்களினதும் மாணவர்களினதும் சேமிப்பு விபரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு இருந்தது.1995ம் ஆண்டு தொடக்கம் சங்கம் செயல்படாத காரணத்தால் கணக்காய்வு அறிக்கை விபரத்தை அடிப்படையாக கொண்டு செயல்படுவதென தீரமானிக்கப்பட்டது. கூட்டுறவு அலுவலர் வித்தக கலாநிதி அவர்களின் சேவை மனப்பான்மையையும் செய்த உதவியையும் சங்கம் நன்றியுடன் நினைவு கூர்கின்றது.உறுப்பினர்களிடையே தாம் எவ்வளவு சேமித்து இருந்தது என்ற சஞ்சலமும் நீங்கியது.

சங்கம் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை முதன் முதலாக 14.12.2007ம் திகதி தொடக்கியது. யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சமாசத்தில் இருந்து இரண்டு இலட்சத்து இருபத்தைந்து ஆயிரம் (225000) ரூபா கடன் பெற்று பன்னிரண்டு உறுப்பினர்க்கு வழங்கியது. இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை சமாச வெளிக்கள அலுவலர் திரு.கோ.கௌரிதாசன் அவர்கள் தொடக்கி வைத்தார் சங்கம்

உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை இன்று வரை தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

கிராமத்தில் படித்து வேலையில்லாமல் பெற்றோருக்கு பாரமாக வீட்டில் இருக்கும் பெண் பிள்ளைகளுக்கு தையல் பயிற்சி வழங்க வேண்டும் என்று சங்கம் தீர்மானித்தது. சமாச தலைவரின் வழிகாட்டலுடனும் யாழ் மாவட்ட கூட்டுறவு சபையினரின் ஒத்துழைப்புடன் தையல்,மனையியல் பயிற்சி நெறி தொடங்கப்பட்டது. 12.11.2007ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திருமதி சி.கமலாதேவி அவர்களின் தொழிலகத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. வலி-தெற்கு பிரதேசசெயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி அவர்கள் பிரமவிருந்தினராக வருகை தந்து மங்கள விளக்கேற்றி வாழ்த்துரை வழங்கி பயிற்சி நெறியை தொடக்கி வைத்தார். இந் நிகழ்வில் சமாச தலைவர் திரு.சு.சிவசுப்பிர மணியம், யாழ் மாவட்ட கூட்டுறவு சபை செயளாளர் திரு.சண்முகசுந்தரம், சிக்கனசேமிப்பு சங்க சமாச உடுவில் பிராந்திய தலைவர் திரு.செ.இலகுநாதன், கூட்டுறவுசபை மகளிர் அபிவிருத்தி அலுவலர் செ.வேதவல்லி சமாச வெளிக்கள அலுவலர் திரு.கோ.கௌரி தாசன்,கிராமஅலுவலர் பா.பாலபத்மன், சுன்னாகம் பலநோக்குகூட்டுறவுசங்க பொது முகாமையாளர் வருகை தந்து வாழ்த்துரையுடன் பயிற்சிநெறி தொடங்கப்பட்டது. பயிற்சி நெறியில் 30பெண்பிள்ளைகள் இணைந்து கொண்டனர்.பயிற்சியை கூட்டுறவுசபை ஆசிரியர் செல்வி குமுதினி அவர்கள் வழங்கினார். தையல்பயிற்சி சங்கத்தலைவர் திரு.சி.தர்மலிங்கம் இல்லத்தில் தொடர்ந்து நடைபெற்றது. பிள்ளைகள் தையல் பழக தையல்மெசின் தேவைப்பட்டது.உடுவில் பிரதேச இளைஞர் சேவைமன்ற அதிகாரி திரு.கணபதிப்பிள்ளை அவர்களை அணுகி உதவிகோரியபோது மறுக்காமல் 5 தையல் இயந்திரங்களையும் தளபாடங்களையும் தந்து உதவினார் பயிற்சிநெறி முடிவடையும்வரை அத் தையல்இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.அவரின்உதவியை என்றும் மறக்காமல் நினைவில் கொள்ளுகிறோம். தையல் மனையியல் பயிற்சி 2008 ஆவணி மாதம்வரை நடைபெற்றது.பயிற்சிகளை கூட்டுறவுச்சபை இலவசமாகவே வழங்கியது.பயிற்சியில் செய்யப்பட்டவற்றை காட்சிப்படுத்தி கண்காட்சி வைக்க தீர்மானிக்கப்பட்டது மயிலணி சைவ மகா வித்தியாலய அதிபர் திரு.நா.சிவநேசன் அவர்களின் ஒத்துழைப்புடன் 21.08.2008ம் திகதி பாடசாலை மண்டபத்தில் கண்காட்சி நடத்தப்பட்டது. பயிலுனர்களால் செய்யப்பட்ட ஆடை அலங்காரங்களும் மனையியல் உற்பத்தி பொருட்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டு இருந்தது வலி.தெற்கு பிரதேசசெயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் அவர்கள் பிரதமவிருந்தினராக வருகைதந்து கண்காட்சியை தொடக்கிவைத்தார். கண்காட்சியில் வைக்கப்பட்டபொருட்கள் அனைத்தும் பார்வையாளரினால் பாராட்டப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேசசெயலாளருடன் யாழ் மாவட்டகூட்டுறவுசபை தலைவர், திரு.பெ.கனகசபாபதி, சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் திரு.சி.குமாரவேல் யாழ்மாவட்ட சி.க.கூ. ச.சமாச உபதலைவர் திரு.கமலநாதன், மயிலணி சைவ மகா வித்தியாலய அதிபர் நா.சிவநேசன், யாழ்மாவட்ட கூட்டுறவுசபை செயலாளர் பொ.சண்முக சுந்தரம், கூட்டுறவுசபை மகளிர்விவகார அலுவலர் திருமதி செ.வேதவல்லி, உடுவில் பிரதேச




06.05.2007அன்று தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை




சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்கள்

கூட்டுறவு அலுவலர் திரு.சு.சண்முகநாதன், சமாச வெளிக்கள அலுவலர் திரு.கோ.கௌரி தாசன், கிராமஅலுவலர் திரு.பா.பாலபத்மன், சனசமூக நிலையதலைவர் திரு.வி.விஜிந்தன் ஆகியோர் வருகைதந்து உரையாற்றினார். இந்நிகழ்வில் திருமதி சி ஜெயந்தி வரவேற் புரையையும் திரு.த.சுதாகரன் நன்றியுரையையும் வழங்கினர்.பயிற்சி ஆசிரியர் செல்வி குமுதினி அவர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிர்வாகம் 05.10.2008ம் திகதி வரை நடைபெற்றது. ஒவ்வொரு மாதமும் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெற்று தீர்மானங்கள் எடுத்தே சங்கம் செயல் பட்டது.இக்காலத்தில் 16 உறுப்பினர்கள் புதிதாக இணைந்து கொண்டனர் 13 உறுப்பினர்கள் தங்கள் உறுப்புரிமையை வேறு நபர்களுக்கு மாற்றினர். ஒரு உறுப்பினர் சங்கத்திலிருந்து விலகினார். மொத்தம் 67 உறுப்பினர்கள் இருந்தனர் இக்காலத்தில் ஒரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்றி எழுபத்தொன்பது (188679) ரூபா உறுப்பினர்களால் சேமிக்கப்பட்டது. சேமிப்புக்களுக்கு இக்காலத்தில் முதன் முறையாக வட்டிகள் வழங்கப்பட்டன.மாணவர் சேமிப்பு வட்டியுடன் பதினொராயிரத்து இருநூற்றி எண்பத் திரண்டு ரூபா ஐம்பதுசதம் (11282.50) மீளளிக்கப்பட்டது. உறுப்பினர்களுக்கு ஏழு இலட்சத்து நாற்பதாயிரம்(740000) ரூபா கடன் பெற்றனர். 29 உறுப்பினர்கள் கடன்பெற்றனர். இப்பணம் யாழ் மாவட்ட சி.க.கூ.ச சமாசத்தில் பெற்றே வழங்கப்பட்டது.ஒரு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து மூன்று (199003) ரூபா கடன் மீளளிக்கப்பட்டது.

சமாசத்தின் வெள்ளி விழாவை ஒட்டி கொடிதினம் நடத்தப்பட்டது 23.07.2007ம் திகதி எமது சங்க உறுப்பினர்கள் சுன்னாகச் சந்தையிலும் கடைகளிலும் கொடி வழங்கி உண்டியல் குலுக்கி நிதி சேகரித்தனர் மயிலணி பாடசாலையிலும் உண்டியல் குலுக்கி நிதி சேகரித்து சமாசத்திற்கு வழங்கினர். சமாச வெள்ளிவிழாவை ஒட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் சங்க பொருளாளர் திருமதி சி.ஜெயந்தி பங்கு பற்றி உடுவில் பிராந்தியத்தில் இரண்டாவது இடமும் யாழ் மாவட்டத்தில் மூன்றாவது இடமும் பெற்று சங்கத்துக்கு பெருமை சேர்த்தார் 30.12.2007ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமாச வெள்ளி விழாவில் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சங்கத்தின் புனரமைப்பின் பின் சமாச தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்கள் பல பொதுச் சபைக் கூட்டங்களுக்கு வருகை தந்து ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்துள்ளார். வெளிக்கள அலுவலர் கௌரிதேவி அவர்கள் கணக்கு வைக்கும் முறைகள் சம்மந்தமாக பயிற்சிகள் வழங்கி நெறிப்படுத்தியது நினைவு கூரத்தக்கது.

05.10.2008 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு சனசமூக நிலையமண்டபத்தில் 17வது வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சமாச தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்களும் சமாச செயலாளர் திரு.சு. நகுலேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இக் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது தலைவராக திரு.சி.தர்மலிங்கம் அவர்களும் உப தலைவராக திருமதி

சி.செல்வராணி அவர்களும் பொருளாளராக திருமதி சி.ஜெயந்தி அவர்களும் நிர்வாக உறுப்பினராக த.ஜோதிராணி, ம.இரதி,செ.வசந்தி, ஸ்ரீ .கௌசல்யா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்ரீ.கௌசல்யா செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். பொருளாளர் ஜெயந்தி சுகயீனம் காரணமாக இயங்க முடியாமல் இருந்ததால் செல்வி.த.அறிவரசி அவர்கள் 14.06.2009ம் திகதி தொடக்கம் 22.05.2010ம் திகதி வரை பதில் பொருளாளராக செயல்பட்டார்.தலைவர் அவர்கள் ஊரில் இருந்து வெளிச் சென்ற காரணத்தினால் 01.07.2009ம் திகதி தொடக்கம் 30.10.2009ம் திகதி வரை உப தலைவி சி.செல்வராணி தலைவராக பணிபுரிந்தார்.இந் நிர்வாகம் 24.04.2011ம்திகதி வரை செயல்பட்டது.26புதிய உறுப்பினர்கள் இக்காலத்தில் சேர்ந்துள்ளனர் ஒருவர் அங்கத்துவ மாற்ற மூடாக இணைந்துள்ளார் 4உறுப்பினர்கள் சங்கத்திலிருந்து விலகியுள்ளனர் இந்நிர்வாக காலப் பகுதியில் உறுப்பினர்கள் இரண்டு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து அறுநூற்றி நாற்பத்தாறு (253646) ரூபாவை சேமித்துள்ளார்கள் சமாசத்தில் இருந்து பதினேழு இலட்சத்து தொன்நூறு ஆயிரம் (1790000) ரூபாவை கடனாக பெற்று உறுப்பினர்க்கு வழங்கியுள்ளது. 61 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்தனர்.

சங்கத்தின் செயல்பாட்டை அறிந்த கூட்டுறவு திணைக்கள வாழ்வாதார முகா மைத்துவ சேவைகளுக்கான கூட்டுறவு சம்மேளன உதவிப்பணிப்பாளர் திரு.கலாதரன் அவர்களும் கூட்டுறவு அலுவலர் கலைவாணி அவர்களும் வந்து கலந்துரை யாடி கடன்வழங்க முன்வந்தனர். 06.12.2009ம் திகதி அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் சங்க உறுப்பினர்க்கு கடன் வழங்கப்பட்டது. இந்நிர்வாக காலத்தில் வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளுக்கான கூட்டுறவு சம்மேளனத்தால் மூன்று இலட்சத்து அறுபது ஆயிரம் (360000) ரூபா கடன் வழங்கப்பட்டது. இக் கடனை 12 உறுப்பினர்கள் பெற்றனர். வாழ்வாதார கடன் திட்டத்தில் இனைந்தோர் ஏழாயிரம் (7000) ரூபாவை சேமித்துள் ளார்கள். இக்காலத்தில் பதினேழு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு (1789990) ரூபா கடன் உறுப்பினர்களால் மீளளிக்கப் பட்டுள்ளது.

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளை சமாசம் கௌரவித்து வருகின்றது. 2008ம் ஆண்டில் புலமைப் பரிசில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் மாணவர்களாகிய சி.டிலெக்சன், ப.ரேணியன் ஆகியோர் 21.02.2009ம் திகதி சமாசத்தால் சமாச பணிமனையில் கௌரவிக்கப்பட்டனர்.2009ம் திகதி சித்தியடைந்த ஜெ.கேம்நாத் 12.12.2009ம் திகதி யாழ் வீரசிங்க மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டனர். இக்காலப்பகுதியில் சங்கத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப் பட்டது.

24.04.2011 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஜனசக்தி முன்பள்ளி மண்டபத்தில் 20வது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட சி.க.கூ.ச.சமாச செயலாளர் திரு.சு.நகுலேஸ்வரன் அவர்களும் உடுவில் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.க.கமலநாதன் அவர்களும் கிராம

அலுவலர் செல்வி செ.சசிகலா அவர்களும் சமாச வெளிக்கள அலுவலர் திரு.கோ.கௌரி தாசன் அவர்களும் சமூகமளித்து இருந்தனர்.இக் கூட்டத்தில் துணை விதியில் கடன் பிரிவு திருத்தப்பட்டது. மொத்த வெளிக்கடன் எல்லை ஒன்பது இலட்சத்திலிருந்து முப்பது இலட்சமா கவும் தனியார் கடன் எல்லை முப்பதாயிரத்திலிருந்து எழுபத்தைந்து ஆயிரம் ரூபாகவும் துணைவிதி திருத்தப்பட்டது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலை வராக திரு.சி.தர்மலிங்கம் அவர்களும் உப தலைவராக திருமதி த.ஜோதிராணி அவர்களும் பொருளாளராக திருமதி ரா.மைதிலி அவர்களும் செயல் குழு உறுப்பினர்களாக திருமதிகள் சி.ஜெயந்தி, ஸ்ரீ.கௌசல்யா, ந.சுகிதா, ஜெ.கேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளராக ஜெ.கேஸ்வரி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். செயலாளர் சுகயீனம் காரண மாக 25.01.2012ம் திகதி தொடக்கம் 22.07.2012ம்திகதி வரை ஸ்ரீ.கௌசல்யா பதில் செயராளராக பணிபுரிந்துள்ளார். இந் நிர்வாகம் 29.03.2014ம் திகதி வரை இயங்கியது. சங்கத்தில் இக்காலத்தில் 20புதிய உறுப்பினர்கள் சங்கத்தில் இணைந்தனர். ஏழு உறுப்பினர்கள் அங்கத்தவர் மாற்றத்தி னூடாக இணைந்தனர் இருவர் சங்க உறுப்புரிமை யில் இருந்து விலகினர். ஒவ்வொரு மாதமும் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெற்று தீர்மானங்கள் எடுத்து சங்கம் இயங்கியது.

இந் நிர்வாக காலத்தில் உறுப்பினர்கள் ஏழு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து முந்நூற்றி எழுபத்தொரு (764371) ரூபாவை சேமித்துள்ளார்கள். சமாசத்தில் இருந்து தொண்நூற்றி ஒரு இலட்சத்து ஐம்பத்திநான்காயிரத்து நாநூறு (9154400) ரூபாவை கடனாக பெற்று இந் நிர்வாக காலத்தில் உறுப்பினர்க்கு வழங்கியுள்ளது.77உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்தனர்.அறுபத்தாறு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து அறுநூற்றி முப்பத்தொன்பது (6653639) ரூபா கடன் அறவீடாக சமாசத்திற்கு செலுத்தப்பட்டது. சமாசத்தின் இயந்திரக்கடன் திட்டத்தில் 10 புதிய துவிச்சக்கர வண்டிகள் பெற்று 14.05.2012ம் திகதி வழங்கப்பட்டது.

சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டங்கள் நடத்துவதற்கு போதிய இருக்கைகள் இல்லாத நிலையில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன சங்க உறுப்பினராகிய அமரர் ஆறுமுகம் பரஞ்சோதி அவர்கள் இயற்கை எய்தியதை ஒட்டி அவரின் ஞாபகார்த்தமாக 20 பிளாஸ்ரிக் கதிரைகளை அவரின் பிள்ளைகள் இணைந்து வாங்கி 13.11.2012ம் திகதி சங்கத்திற்கு அன்பளிப்பு செய்தனர்.அவை சங்க கூட்டங்கள் நடத்துவதற்கு உறுதுணையாக உள்ளன.அவர்களின் சேவை மனப்பான்மை என்றும் நினைவில் கொள்ளத்தக்கது.

5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாகிய சு.டாரணி, சு.சங்கவன் ஆகியோர் 14.01.2012ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டனர். 2012ம் திகதி சித்தியடைந்த ஜெ.ஜனனி, அ.வருண் ஆகியோர் 29.12.2012 இத் திகதியில் கூட்டுறவுசபை மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டனர். 2013ம் ஆண்டு சித்தியடைந்த சி.கிருஷதிகா வீரசிங்கம் மண்டபத்தில் 30.11.2013ம் திகதி கௌரவிக்கப்பட்டார்.

சங்கத்தின் சார்பில் சன சமுகநிலைய வாசிகசாலைக்கு வீரகேசரி தினசரி பத்திரிகை 01.02.2013ம் திகதி தொடக்கம் 2015 சித்திரை மாதம் வரை தினமும் போடப்பட்டது.

29.03.2014ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஜனசக்தி முன்பள்ளி மண்டபத்தில் சங்கத்தின் 22 வது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுசங்க சமாச தலைவர் திரு.செ.இலகுநாதன், சமாச செயலாளர் திருமதி ச.பரமானந்தம்,கிராம அலுவலர் திருமதி ச.சசிகலா,சமாச கல்வி அலுவலர் திரு.கோ.கௌரிதாசன், வெளிக்கள அலுவலர் திருமதி உஷா, ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணயசங்க தலைவர் திரு.க.மகா தேவன்,ஆலயநிர்வாக தலைவர் திரு.சி.மகேந்திரம் ஆகியோர் சமுகம் தந்து இருந்தனர்.

இக் கூட்டத்தில் சங்கத்தின் துணைவிதி மீண்டும் திருத்தப்பட்டது சங்க மொத்த வெளிக்கடன் எல்லை முப்பது இலட்சத்தில் இருந்து ஐம்பது இலட்சமாகவும் தனியார்கடன் எல்லை எழுபத்தையாயிரத்தில் இருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும் துணைவிதி திருத்தம் செய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது தலைவராக திரு.சி.தர்ம லிங்கம் அவர்களும் உப தலைவராக திருமதி.ம.இரதி அவர்களும் பொருளாளராக திருமதி சி.கவிதா அவர்களும் நிர்வாக சபை உறுப்பினராக திருமதிகள் ச.வதனி, த.மகிலாஜினி, சி.ஜெயந்தி, த.ஜோதிராணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். செயலாளராக திருமதி ச.வதனி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இந்நிர்வாகம் 27.02.2016 ம் திகதி வரை பணிபுரிந்துள்ளது. இக் காலத்தில் 13 உறுப்பினர்கள் புதிதாக இணைந்துள்ளனர். இரண்டு உறுப்பினர்கள்அங்கத்துவமாற்ற மூடாக இணைந்துள்ளனர் நான்கு உறுப்பினர்கள் சங்கத்தலிருந்து விலகியுள்ளனர். ஒவ்வொரு மாதமும் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.இந்நிர்வாக காலத்தில் உறுப்பினர்கள் நான்கு லட்சத்து முப்பத்திரண்டா யிரத்து அறுநூற்றி ஐம்பத்தெட்டு(432658) ரூபாவை சேமித்துள்ளார்கள். எழுபத்தாறு லட்சத்து அறுபதாயிரம் (7660000) ரூபாவை சமாசத்தில் கடனாக பெற்று உறுப்பினர்க்கு வழங்கியுள்ளது.88 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்தனர். அறுபத்தைந்துலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து முந்நூற்றி பதினான்கு (6583314) ரூபாவை உறுப்பினர்கள் கடனுக்காக மீளளித்துள்ளார்கள்.

2014ம் ஆண்டு 5 ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கள் சி.ஆதவன்,பி.டியுகா, ர.கம்சிகா ஆகியோர் 19.12.2014ம் இத் திகதியில் சமாசத்தால் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 92வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் கௌர விக்கப்பட்டனர்.2015ம் ஆண்டு சித்தியடைந்த சு.மதிசா அவர்கள் 14.11.2015ம் திகதியில் வீரசிங்கம் மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டார்.



93வது சர்வதேச கூட்டுறவு தின விழாவில் உடுவில் பிராந்தியத்தில் முதிர்ந்த கூட்டுறவாளராக எமது சங்கத் தலைவர் திரு.சி.தர்மலிங்கம் அவர்கள் கௌரவிக்கப்பெற்றபோது



சங்கத்தின் தையல் பயிற்சி தொடக்கவிழாவில் சமாசத் தலைவர் உரையாற்றும் போது

19.12.2014ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 92வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் பிராந்தியங்களின் சிறந்த கூட்டுறவு சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. உடுவில் பிராந்தியத்தில் சிறந்த சங்கமாக ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கி பராட்டப்பட்டது.

14.11.2015ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத்தால் நடத்தப்பட்ட 93வது சர்வதேசகூட்டுறவு தின விழாவில் உடுவில் பிராந்தியத்தில் முதிர்ந்த கூட்டுறவாளராக ஜனசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கதலைவர் திரு.சி.தர்மலிங்கம் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

சமாசத்தின் கல்வி ச்சுற்றுலா திட்டத்தில் 2015ம் ஆண்டில் சங்கத்தலைவர் கலந்து நாடடின் பல பாகங்களும் சென்று பார்த்து அறிந்து வந்துள்ளார். சமாசத்தால் சங்க உறுப்பினர்களுக்கிடையில் நடத்தப்படுகின்ற விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றி சிறப்பித் துள்ளார்கள்.

27.02.2016ம் திகதியில் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சங்கத்தின் 24வது வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு உடுவில் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.அ.வசிகரன் அவர்களும் சமாசகல்வி அபிவிருத்தி அலுவலர் திரு.கோ.கௌரிதாசன் அவர்களும் வெளிக்களஅலுவலர் செல்வி க.கௌரிதேவி அவர்க ளும் வருகை தந்து இருந்தனர். இக் கூட்டத்தில் சங்கத்தின் கடன்தொடர்பான துணைவிதி மீளவும் திருத்தப்பபட்டது மொத்த வெளிக்கடன் எல்லை ஐம்பதுலட்சத்திலிருந்து எழுபத்தைந்து லட்சமாகவும் தனியார்கடன்எல்லை ஒருலட்சத்திலிருந்து ஒருலட்சத்து ஐம்பது ஆயிரமாகவும் துணைவிதி திருத்தம் செய்யப்பட்டது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலைவராக திரு.சி.தர்மலிங்கம் அவர்களும் உப தலைவியாக திருமதி ச.நாகேஸ்வரி அவர்களும் பொருளாராக திருமதி ச.வதனி அவர்களும் செயல் குழு உறுப்பினராக த.ஜோதிராணி,சி.ஜெயந்தி, த.சாளினி, சூ.சுபர்ணா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். திருமதி த.ஜோதிராணி செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இந் நிர்வாகம் 27.02.2016ம் திகதியில் இருந்து இன்றுவரை இயங்குகின்றது. சங்கத்தில் 5புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளனர் மொத்தம்121 உறுப்பினர்கள் சங்கத்தில் உள்ளனர்.இதில் ஆண்கள் 12 பேர் மட்டுமே

சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டங்கள் மாதம் தோறும் நடைபெற்றுள்ளன.செயல் குழுக் கூட்டங்களும் இந் நிர்வாக காலத்தில் ஒவ்வொருமாதமும் நடைபெறுகின்றன.

இந் நிர்வாக காலத்தில் உறுப்பினர்கள் நான்குலட்சத்து நானூற்றி அறுபத்தொரு (400461)ரூபாவை சேமித்துள்ளார்கள்.ஐம்பத்தைந்துலட்சத்து எண்பதினாயிரம் (5580000) ரூபாவை சமாசத்தில் கடனாக பெற்று உறுப்பினர்க்கு வழங்கியுள்ளது.

57 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.அங்கத்தவர்கள் கடன் மீளளிப்பாக நாற்பத்தினான்கு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூற்றி முப்பத்தேழு (4446737) ரூபாவை கடனுக்காக செலுத்தியுள்ளார்கள்.

2016ம் ஆண்டு ஆடி மாதம் சேமிப்பு மாதமாக கூட்டுறவு திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டது. சிக்கன சங்கங்களும் 1000/ ரூபாய்க்கு மேல் சேமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.எமது சங்க உறுப்பினர்கள் 40 பேர் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சேமித்தார்கள் 25.11.2016ம் திகதி சமாசமும் கூட்டுறவு திணைக்களமும் இணைந்து வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில் எமது சங்க 40 உறுப்பினர்க்கு நினைவுப்ப ரிசில் வழங்கப்பட்டன.

சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 2016ம் ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து சங்கத்திற்கு தளபாடங்கள் வாங்க முப்பதினாயிரம் ரூபா ஒதுக்கித் தந்தார்.அந் நிதியை பயன்படுத்தி வலி தெற்கு பிரதேச செயலகம் 29.09.2016ம் திகதி 44 பிளாஸ்ரிக் கதிரைகள் வாங்கி அன்பளிப்பு செய்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை என்றும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

சிக்கனசங்க சமாசம் சிக்கன தினத்தையொட்டி விசேட பரிசூதியத்திட்டம் ஒன்றை 2016 ஐப்பசி மாதம் நடைமுறைப்படுத்த முன்வந்தது.அத்திட்டத்தில் இனைவோர் நான்கு வருடங்களுக்கு மாதம் நூறு ரூபாய் வீதம் சேமிக்க வேண்டும் இத் திட்டத்தில் எமது சங்க உறுப்பினர்கள் 65 பேர் இணைந்து மாதம் தோறும் சேமிக்கின்றார்கள்.

5 ம் ஆண்டு புலமைபரிசில் சித்தியடைந்த மாணவி ற.மதுமிதா 28.02.2017ம் திகதி வீரசிங்க மண்டபத்தில் சமாசத்தால் கௌரவிக்கப்பட்டார்.

2016ம் ஆண்டு சமாசத்தால் வடமகாணத்திற்கான சுற்றுலா திட்டத்தில் எமது சங்க உறுப்பினர்களில் பலர் கலந்து பயன்பெற்றனர்.

சங்கத்தின் நோக்கம் சிக்கனமாக வாழ்ந்து சேமிப்பது என்னும் இலட்சியத்தோடே உருவாக்கப்பட்டது. அந் நோக்கத்திற்கு ஏற்ப சிக்கனத்தை கடைப்பிடித்தே சங்கம் இந்நிலைக்கு வளர்ந்துள்ளது.நிர்வாகிகளின் அர்பணிப்பும் உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் சங்கவளர்ச்சிக்கு உறுதுணையாகயிருந்தது. உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்வுகளுக்கும், போக்குவரத்துக்கு தங்கள் சொந்த நிதியையே செலவு செய்தனர். சங்கத்திற்கு தேவையான காகிதாதிகள்,எழுதுகருவிகள் போன்றன சங்கத்தின் ஆரம்பகா லங்களில் சங்கநிதியை பயன்படுத்தாமல் தங்கள் சொந்தநிதியைப் பயன்படுத்தி வாங்கினர். சமாச செயலாளர் திரு.நகுலேஸ்வரன் அவர்கள் சங்கம் புனரமைத்த ஆரம்பகாலத்தில் கோவைகளும், எழுதுகருவிகளும் தந்து உதவியுள்ளார் என்றும் நினைவில் உள்ளது. சங்கம் புனரமைத்திலிருந்து இன்று வரை சங்கம் சேமிப்பு, கடன்வழங்கல் என பெரியள




சமாசத்தின் வெள்ளிவிழாவின் பேச்சுப்போட்டியில் பரிசில் பெறும்போது



நூல் நிலைய ஆரம்ப நிகழ்வு

விலான பதிவுகளை செய்துள்ளது அவற்றிற்காக சங்கத்தின் நிதி ஒரு சதமேனும் செலவு செய்யப்படவில்லை அர்ப்பணிப்பான சேவை ஊடாகவே சங்கம் வளர்ந்துள்ளது.

அடுத்து மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடனே சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.சிறு துளி பெருவெள்ளம் என்பர் மக்கள் உழைக்கும் பணத்தில் சிறிதளவாவது சேமிக்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்ட சங்கம் கடுமையாக உழைத்துள்ளது.சங்கம் ஆரம்பித்தவுடன் உறுப்பினர்களிடையே சேமிப்பை நடைமுறைப்படுத்தியது. மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்த மாணவர் சேமிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

நாட்டில் இருந்த அசாதாரண சூழ் நிலை காரணமாக 1995ம் ஆண்டுவரை 24092/ ரூபாவே சேமிக்கப்பட்டது. இடம் பெயர்வின் பின் நீண்டகாலம் சங்கத்தை செயல்படுத்த முடியாதநிலை இருந்தது.இக்காலத்தில் சனசமுகநிலைய நிர்வாகம் சேமிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்றது. லீட்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் கடன் வழங்கல் சேமிப்பு திட்டத்தை முன்னெடுத்தது. அத்திட்டத்தில் பலர் இணைந்து சேமித்தனர். பின்னர் அவர்களின் சேமிப்பு மீளளிக்காமல் முடங்கிப்போனது.பின்பு அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையத்தின் அனுசரணையுடன் மக்களிடையே குழுக்கள் அமைத்து சேமிக்கப்பட்டது.அத்திட்டத்தில் பெரும்பாலான மக்கள் இனைந்து வாரந்தோறும் 10ரூபா வீதம் சேமித்தார்கள்.அப் பணமும் உரியவர்களுக்கு மீளளிக்காமல் முடக்கப்பட்டது. இந் நிலையிலேயே புதிய தலைமைத்துவத்தின் கீழ் சங்கம் 2007ம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. அன்றிலிருந்து சேமிப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. கடந்த10 ஆண்டுகளிலே சேமிப்பு 2064544/ரூபாவாக வளர்ச்சியடைந்துள்ளது. சங்கம் உறுப்பினர்களின் சேமிப்பிற்கு ஆறுமாதத்திற்கு ஒரு முறை வட்டி வழங்குகின்றது.தற்போது சங்கம் 7 % வட்டி வழங்குகின்றது.சேமிப்பு வட்டியுடன் சேர்த்து 31.03.2017ல் 2308769/ரூபாவாக வளச்சியடைந்துள்ளது. மேலும் உறுப்பினர்களின் சேமிப்பில் இருந்து 283741/ ரூபாவை அவர்களின் கோரிக்கையின் பேரில் மீளளித்துள்ளது.யாழ் மாவட்ட சமாசத்தில் சங்கத்தின் சேமிப்பு பணம் வட்டியுடன் 1825248 ரூபா உள்ளது.

சங்க உறுப்பினர்க்கு கடன்வழங்கும் திட்டத்தை 14.12.2007ம் திகதி தொடக்கியது. கடந்த 10 ஆண்டுகளில் பாரிய நிதியை கடனாக பெற்று உறுப்பினர்க்கு வழங்கியுள்ளது.இரண்டுகோடியேஐம்பதுஇலட்சத்து முப்பத்திநான்காயிரத்து நானூறு (25034400/) ரூபாவை கடனாக பெற்று வழங்கியுள்ளது. இக் கடனில் மூன்று இலட்சத்து அறுபதுஆயிரம் (360000/) ரூபா வாழ்வதார கடனாக கூட்டுறவுதிணைக்களம் வழங்கியுள்ளது. இரண்டு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து நானூறு (24674400/) ரூபாவை யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்குகூட்டுறவுசங்கசமாசம் வழங்கியுள்ளது. சங்கம் உறுப்பினர்க்கு இரண்டு உறுப்பினர்களின் பிணையுடன் இரண்டு வருடத்தில் கட்டி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இலகுமுறையில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

30000ரூபா கடன் வழங்கும் திட்டத்துடன் தொடங்கப்பட்ட சங்கம் 75000/பா 100000 ரூபா 150000ரூபா வென படிப்படியாக கடன் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. சங்கத்தின் உறுப்பினர்களில் 85 பேர் தற்போது சங்கத்திற்கு கடனாளியாக உள்ளனர்.

உறுப்பினர்கள் தாம் பெற்ற கடனை மாதம் தோறும் செலுத்தி வந்துள்ளனர். தாம் பெற்ற கடனில் ஒரு கோடியே தொண்ணூற்றியாறு இலட்சத்து இருபத்தையாயிரத்து நான்நூற்றி எண்பத்திரண்டு (19625482) ரூபாவை மீள செலுத்தியுள்ளார்கள். அத்துடன் வட்டியும் செலுத்தியுள்ளார்கள் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

சங்கம் தான் பெற்ற கடனில் இரண்டு கோடியே எட்டு இலட்சத்து தொண்ணூற்றி ஐந்து ஆயிரத்து நான்னூற்றியொரு (20895401)ரூபாவை சமாசத்திற்கு செலுத்தியுள்ளது. அத்துடன் வட்டியும் செலுத்தப்பட்டுள்ளது.

சங்கம் தனது பணியை காலத்திற்கு காலம் விரிவுபடுத்தி செயற்பட்டபோது சங்கத்தின் இலாபமும் படிப்படியாக வளர்ந்துள்ளது. 31.03.2010ம் திகதி இத் திகதியில் கணக்காய்வில் ரூபா 37201.43 சதமாக இருந்த இலாபம் 31.03.2013ம் ஆண்டு இத் திகதியில் கணக்காய்வில் ரூபா 124662.32 சதமாக வளர்ந்தது பின்பு 31.03.2015ம் திகதி கணக்காய்வில் 233733.58 சதமாக வளர்ச்சியடைந்தது. 31.03.2016ம் திகதி கணக்காய் வில் ரூபா 321967.15 சதமாக உள்ளது. சங்கத்தின் இலாபம் வளர்ந்து வருவதற்கான காரணம் சங்கத்தை சிக்கனமாக பேணியதும் தன்னலமற்ற அர்பணிப்பான சேவையும் தான். சங்கம் 2009ம் ஆண்டு தொடக்கம் மாத கலண்டர் சமாசம் ஊடாக அச்சிட்டு உறுப்பினர்க்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. சமாசத்தினாலும் கூட்டுறவு திணைக்களத்தினாலும் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புக்களிலும், விழாக்களிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

சங்கத்தின் கணக்குகள் நீண்டகாலம் கணக்காய்வு செய்யாமல் இருந்தன. இந் நிலையில் கூட்டுறவு அலுவலர் கலைவாணி அவர்களின் ஒழுங்குபடுத்தபடுத்தல் ஊடாக உடுவில் பிரதேசத்தில் கடமை புரிந்த கூட்டுறவுஅபிவிருத்தி அலுவலர் திரு.க.கமலநாதன் அவர்கள் கணக்காய்வு செய்ய முன்வந்தார்.அவர் மிகவும் சிரத்தையெடுத்து 01.01.1995ம் திகதி தொடக்கம் 31.03.2010ம் திகதி வரையான 15 வருட சங்ககணக்குகளை கணக்காய்வு செய்து வந்துள்ளார். 01.04.2010ம் திகதி தொடக்கம் 31.03.2013ம் திகதி வரையான சங்க கணக்குகளை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.ச.ரதிகுலன் அவர்களும் 01.04.2013ம் திகதி 31.03.2015ம் திகதி வரையான கணக்குகளை கூட்டுறவுஅபிவிருத்தி அலுவலர் திருமதி சிவகௌரி.ரஜீவன் அவர்களும் 01.04.2015ம் ஆண்டு இத் திகதி தொடக்கம் 31.03.2016ம் ஆண்டு இத் திகதி வரையான கணக்குகளை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.ச.பிறேமிலன் அவர்களும் கணக்காய்வு செய்து தந்துள்ளார்கள் சங்கத்தின் ஆரம்ப கணக்குகளை கூட்டுறவு அபிபிருத்தி அலுவலர் திரு.சின்னராசா அவர்கள் கணக்காய்வு செய்து தந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் சங்கத்தின் நிதி

நிலையை எமக்கு தெரியப்படுத்தி, ஆலோசனைகள் வழங்கி உதவியுள்ளனர். இவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

### சங்க உறுப்பினர்களின் சேமம், கடன்மீளளிப்பு விபரம்

| | உறுப்பினர் சேமிப்பு | வழங்கிய கடன் | உறுப்பினர் கடன் வரவு | சமாசக் கடன் மீளளிப்பு |
|---|---|---|---|---|
| 31.03.1992 தொடக்கம் 31.12.1992 வரை | 24092 | | | |
| 06.05.2007 தொடக்கம் 31.03.2008 வரை | 126239 | 525000 | 46890 | 46883 |
| 01.04.2008 தொடக்கம் 31.0.3.2009 வரை | 127699 | 645000 | 404192 | 436630 |
| 01.04.2009 தொடக்கம் 31.0.3.2010 வரை | 112308 | 1030000 | 714935 | 804382 |
| 01.04.2010 தொடக்கம் 31.0.3.2011 வரை | 76078 | 690000 | 822975 | 857055 |
| 01.04.2011 தொடக்கம் 31.0.3.2012 வரை | 348076 | 3235000 | 1344984 | 1419551 |
| 01.04.2012 தொடக்கம் 31.0.3.2013 வரை | 242199 | 2994400 | 2820290 | 2925875 |
| 01.04.2013 தொடக்கம் 31.0.3.2014வரை | 196191 | 3025000 | 2656120 | 2756801 |
| 01.04.2014 தொடக்கம் 31.0.3.2015 வரை | 224216 | 4845000 | 3489875 | 3708224 |
| 01.04.2015 தொடக்கம் 31.0.3.2016 வரை | 220576 | 3695000 | 3487737 | 3717000 |
| 01.04.2016 தொடக்கம் 31.0.3.2017 வரை | 366869 | 4350000 | 3837484 | 4223000 |
| | 2064544 | 25034400 | 19625482 | 20895401 |

### மயிலணி வடக்கு ஜனசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் வருடாந்த கணக்காய்வு அறிக்கை - 31.03.2016ல் உள்ளபடியான ஐந்தொகை

| 31.03.2015 | பொறுப்புக்கள் | 31.03.2016 | 31.03.2015 | சொத்துக்கள் | 31.03.2015 |
|---|---|---|---|---|---|
| 11.300.00 | அங்கத்தவர் பங்கு | 12.200.00 | 1.000.00 | சமாசப்பங்கு | 1.000.00 |
| 96,166.88 | சட்டப்படி அடக்கப்பணம் | 130.102.87 | 1.426,423.71 | சமாசச்சேமம் | 1.624.468.71 |
| 233.733.58 | மீதி இலாபம் | 321,967.15 | 2.000.00 | சமாச பரசூதியம் | 2.000.00 |
| 300.00 | பங்குமாற்று நிதி | 300.00 | 1.491.526.00 | அங்கத்தவர் சாதாரணகடன் | 1.628.246.00 |
| 1.710.798.00 | அங்கத்தவர் சேமம் | 2,002,155.00 | 2.833.039.00 | அங்கத்தவர் பொதுக்கடன் | 2.903.582.00 |
| 2.000.00 | அங்கத்தவர் பரசூதியம் | 2,000.00 | 10,701.78 | மக்கள் வங்கி சேமம் | 11,222.73 |
| 540.50 | மாணவர் சேமம் | 540.00 | 107.50 | கையிருப்பு | 279.50 |
| 1.028,000.00 | சமாச சாதாரண கடன் | 1.175,000.00 | | | |
| 2,646,000.00 | சமாச பொதுக்கடன் | 2.477,000.00 | | | |
| 35.959.03 | கூட்டுறவு நிதி | 49.533.43 | | | |
| 5.764.797.99 | | 5,170,798.94 | 5,764,797.99 | | 6,170,798.94 |

நான் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய மயிலணி வடக்கு ஜனசக்தி சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளைப் பரிசீலனை செய்து மேற்படி பிரதி கொடுக்கப்பட்டுள்ள ஐந்தொகையினையும் கணக்காய்வு செய்துள்ளேன் நான் சங்க அலுவலரிடம் இருந்து கேட்டுக்கொள்ளப்பட்ட சகல தகவல்களையும், விளக்கங்களையும் (பொது அறிக்கையில் குறிப்பிட்டவை தவிர) பெற்றுக்கொண்டேன். நான் ஐந்தொகையில் குறிப்பிட்டுள்ள சகல சொத்துக்களையும், பொறுப்புக்களையும் சரிபிழை பார்த்து அச்சொத் துக்கள் பொறுப்புக்கள் உள்ளன எனவும் அவை பெறுமதிக்கு மேலாக மதிப்பிடப்பட வில்லைஎனவும் திருப்தியடைகின்றேன். எனது சிறந்த அபிப்பிராயத்தினையும் சங்கப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளவாறும், சங்க அலுவலரால் எனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் விளக்கங்களின் பேரிலும் மேற்படி பிரதி ஐந்தொகை சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என அபிப்பிராயப்படுகின்றேன்

கணக்காய்வாளர்

திரு.ச.பிறேமிலன் (கூட்டுறவு அபிருத்தி உத்தியோகத்தர்)

1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இடையில் தள்ளாடி மீண்டும் துளிர் விட்டு 25 ஆண்டை பூர்த்தி செய்யும் இன்றைய காலத்தில் கடந்தகாலத்தை மீட்டுப் பார்க்கவேண்டிய கடமையுள்ளது. சங்கத்தின் முதல் நிர்வாகிகளான தலைவர் உ.பாலேஸ்வரி, செயலாளர் செ.வசந்தி,பொருளாளர் த.வாசுகி ஆகியோரும் நிர்வாக சபையினரும் இனைந்து ஆற்றிய பணிகளின் காரணமாகவே கிராமத்தில் சங்கம் வேரூன்றியது. எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் சங்கம் பதிவு செய்யப்பட்டது. சங்கம் புணரமைக்கப்பட்ட பின்பும் பல நிர்வாகங்கள் காலத்துக்கு காலம் தெரிவு செய்யப்பட்டு பணிகள் செய்துள்ளனர். இச் சங்கத்தின் வெள்ளிவிழா காலத்தில் இவர்கள் அனைவரினதும் அரப்பணிப்பான சேவையை மனதாரப் பாராட்டுகிறோம். சங்கத்தின் வளர்ச்சியில் சமாசத்தின் பணியை பிரித்து பார்க்கமுடியாது. சமாசத்தின் உதவி இன்றேல் சங்கத்தின் வளர்ச்சி இல்லை. சமாசத்தின் முன்னைய நாள் தலைவர் அமரர் சு.சிவசுப்பிரமணியம் அவர்கள் பல முறை சங்கத்திற்கு வந்து ஆலோச னைகள், ஒத்துழைப்புக்கள் வழங்கி எம்மை ஊக்குவித்த காரணத்தினாலேயே சங்கம் வளர்ச்சியடைந்தது. அவர் என்றும் எம்மால் நினைவுகூறப்படவேண்டியவர். சமாசத்தின் தற்போதைய தலைவர் திரு.செ.இலகுநாதன்அவர்கள் சங்கம் புனரமைத்த காலத்திலிருந்து இன்றுவரை எமது சங்க வளர்ச்சிக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வந்துள்ளார். கடன்கள் எவ்வளவு தேவையென்றாலும் மயிலணிச் சங்கமென்றால் வழங்குங்கள் எனபணித்தவர். சமாசத்தின் வெளிக்கள அலுவலகராகிய திரு.கோ.கௌரி தாசன், திருமதி உஷா, திருமதி க.கௌரிதேவி ஆகியோர் சங்கத்திற்கு வந்து சங்க செயற் பாடுகள் அனைத்துக்கும் வழிகாட்டியாக செயல்பட்டனர். சமாசத்தின் செயலாளர் கள்,கணக்காளர்கள்,பணியாளர்கள் ஆகியோர் அனைவரும் எமது சங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.இவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களான திருவாளர்கள் வித்தக கலாநிதி, க.கமலநாதன், சி.சண்முகநாதன்,க.பாலகிருஸ்ணன் ,அ.வசிகரன்,பா.பாலரவி ஆகியோர்

சங்கத்தின்வளர்ச்சிக்குபலஆலோசனைகள்வழங்கிஉதவியுள்ளதுடன்சங்க துணைவிதிகள் திருத்த பல வழிகளிலும் உறுதுணையாக இருந்துள்ளனர். சங்கத்தின் ஆரம்பகாலங்களில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களான திரு.சின்னத்தம்பி, திரு.சின்னராசா, திருமதி செ.அழகேந்திரராசா ஆகியோர் சங்கவளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர். இவர்கள் அனைவரையும் சங்கத்தின் வெள்ளிவிழாவில் நன்றியுடன் நினைவுகூறுகின்றோம்.

சங்கத்தின் வளர்ச்சியின் அடிநாதமே உறுப்பினர்கள்தான். உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இல்லையேல் எந்த ஒரு பொது அமைப்பும் இயங்கமுடியாது. சங்கத்தின் கூட்டங்களுக்கு வருவதோடு சேமிப்பு, கடன் மீளளிப்பென சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கூடுதலாக உள்ளது. சமாச சார்பில் நடைபெறும் விழாக்கள், பயிற்சிவகுப்புகள் விளையாட்டுப்போட்டிகள்அனைத்திலும்கூடுதலானஉறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ள னர். மேலும் இவ் வெள்ளிவிழா சிறப்புற நடைபெற தங்களான ஒத்துழைப்பையும் செய்துள்ளனர். சங்கத்தின் வளர்ச்சியில் உறுதுணையாக இருந்த அனைத்து அங்கத்தவர்க ளுக்கும் நன்றி தெரிவிப்பதோடு சங்கம் எதிர்காலத்தில் மேலும் சிறக்க வேண்டும் என தெரிவித்து நிறைவு செய்கின்றோம்.

# பெண்கல்வி

பெண் கல்வி என்பது பெண்கள் கல்வி பெறுவதற்கான உரிமை அதன் நிலைமை,தடைகள் எதிர்காலம் போன்ற பல விடயங்களைக் குறிக்கும்.ஒரு சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் கல்வியறிவு பெறும் போதுதான் அங்கு முழுமையான சமுதாய வளர்ச்சி ஏற்படும் ஆனால் ஆரம்பகாலத்தில் "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்ற பழமைவாத கருத்தால் பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தனர் ஆனால் பிற்பட்டகாலத்தில் பெண்கல்வி பற்றிய பழைய கருத்துக்கு எதிராக பாரதியார் பாரதிதாசன் போன்றவர்களும் பெண்கல்வியை ஆதரித்தும் போற்றியும் பலகருத்துக்களைக் கூறியுள்ளனர்.

பெண் என்பவள் ஒரு குடும்பத்தில் முக்கிய பங்கு வகிக்கிறாள். குறிப்பாக தன்னுடைய குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் அடித்தளம் இடுகின்றாள் ஒரு குழந்தை முதலில் அறிமுகம் ஆவது தன் தாயாரிடம் தான் அந்தக் குழந்தைக்கு பாலூட்டுவதுடன் நல்லொழுக்கம் இறைபக்தி போன்றவற்றை சேர்த்தே ஊட்டுகின்றாள். ஒவ்வொரு ஆணுக்கும் முதற்பள்ளிக்கூடமாகவும் பாலகப் பருவ ஆசிரியராகவும் திகழ் பவள் தாயாகிய பெண்தான் அந்தத் தாய்க்கு நல்லறிவும் கேள்வி ஞானமும் வேண்டு மென்றால் பெண்கல்வி மிக அவசியமாகும் அப்போதுதான் சமுதாயம் வளர்ச்சி பெறும். பாரதியார் பெண்கல்வி பற்றி கூறுகையில் பெண்கல்வி சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒன்றாக அமைவது மட்டுமன்றி வறுமை, தீண்டாமை, பெண்ணடிமை போன்றவற்றை மாற்ற பெண்கல்வி அவசியம் என்றார் இதனை

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்- புவி
பேணி வளர்த்திடும் ஈசன்

என்ற கவிதை வரிகளின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

இதேபோன்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்
அந்நிலத்தில் புல்விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

என்று பாடி பெண்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளார். இதுமட்டுமன்றி இவர் பெண்களுக்கு கல்வி வேண்டும் குடித்தனம் பேணுவதற்கு

பெண்களுக்கு கல்வி வேண்டும் மக்களைப் பேணுவதற்கு
பெண்களுக்கு கல்வி வேண்டும் உலகினைப் பேணுவதற்கு
பெண்களுக்கு கல்வி வேண்டும் கல்வியைப் பேணுவதற்கு

என்று பாடி பெண்கல்வியின் அவசியத்தை உணர்த்தியுள்ளார்.

ஒரு ஆண் கல்வி கற்றால் அது அவனது வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் அவனது குடும்ப முன்னேற்றத்திற்கும் போதுமானதாக மட்டும் இருக்கும் ஆனால் ஒரு குடும்பத்தில் பெண்கள் கல்வி கற்றால் அது தலைமுறை தலைமுறைக்கும் அந்தக் குடும்பம் அறிவு, பண்பு, சிறப்போடு வாழ வழிவகுக்கும்.



தையல் பயிற்சி தொடக்க விழாவின் ஆரம்ப நிகழ்வு



சனசமூக நிலையத்தின் விளையாட்டு விழா

ஆரம்பகாலங்களில் பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டாலும் ஆங்கிலேயர் வருகை, அதன் பின் ஏற்பட்ட சமூக விழிப்புணர்வு, பெண்ணியக்கங்கள், அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடுகள் காரணமாக பெண்ணின் இருண்ட வாழ்வில் கல்வி ஒளி ஏற்பட்டது. "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை" என்ற நிலை மாறி எழுத்தறிவு தரும் புதுமை எழுச்சி நிலை மலரத் தொடங்கியது இதனால் பெண்களுக்கான சமகல்வி வாய்ப்புக்களை ஓரளவு ஏற்படுத்தியுள்ளன எனினும் மேற்குலக நாடுகளில் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி பெண்கள் ஆண்களை விடக் கூடுதலான உயர்கல்வியைப் பெறுகின்றனர். ஆனால் வளர்முக நாடுகளில் பெரும்பாலான நாடுகளில் குறைவிருத்திப் பொருளாதார நிலை காரணமாக மிக அண்மைக்காலம் வரை பெண்களுக்கு ஆரம்பக்கல்வி போதுமானதென்ற நிலை காணப்படுகின்றது. இவ்வாறு இருப்பினும் பெரும்பாலான நாடுகளில் ஆண்களுக்குச் சமனாக கல்வி கற்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் வளர்ச்சி பெற்றிருப்பதைக் காணலாம்.எனவே பெண்கல்வி ஊடாக சமுதாயம் வளர்ச்சி பெறும் இக்கல்வி என்றைக்கும் அனைவரது வாழ்விற்கும் ஒளி தரும்.

திருமதி மைதிலி ராமதாஸ்
ஆசிரியர் யா/வயாவிளான் மத்திய
கல்லூரி

# ஜனசக்தி சனசமூக நிலையம்

கிராமிய மக்களிடையே அறிவை வளர்க்க வேண்டும் என்ற நோக்கோடு வாசிக சாலைகள் ஐம்பது அறுபதாம் ஆண்டுகளில் கிராமங்களில் அமைக்கப்பட்டன. இக் கிராமத்தில் வாழ்ந்த முற்போக்கான இளைஞர்கள் பொதுமக்களின் உதவியுடன் வாசிகசாலை ஒன்றை 10.12.1966ம் திகதி ஆரம்பித்தனர். திருமதி க.சின்னத்தங்கம் அவர்களின் காணியில் கட்டிடம் அமைத்து வாசிகசாலையை ஆரம்பித்தனர். மயிலணி வடக்கு மக்களின் ஒன்றுபட்ட சக்தியின் வெளிப்பாடாக ஜனசக்தி சனசமூக நிலையம் என்னும் பெயரை வாசிகசாலைக்கு சூட்டினர். ஆரம்பகால தலைவராக திரு.மு.தர்மலிங்கம் தெரிவு செய்யப்பட்டு சனசமூக நிலையம் இயங்கியது. சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் ஆன்மீக செயல்பாடுகளுக்கும் முன்னிரிமை கொடுத்து நிலையம் செயற்பட்டது. சில காலத்தின் பின் அவ்விடத்தில் வாசிகசாலை இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. சனசமூக நிலையம் தற்போது இயங்கும் இடத்தை மக்கள் நிதி சேகரித்து வாங்கி கட்டடம் அமைத்தனர். கட்டடம் அமைக்கும் வரை தலைவரின் இல்லத்தில் வாசிகசாலை இயங்கியது.

சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இக்காலப் பகுதியில் பல நிர்வாகங்கள் காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்பட்டு இயங்கி யுள்ளது. பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்தியுள்ளது. 1975ம் ஆண்டு சுன்னாகம் பட்டினசபையுடன் தொடர்பு கொண்டு கிராமத்திற்கு மின்சாரம் வர முன்னின்று செயல்பட்டது. மின்சாரம் கிராமத்திற்கு வருவதற்காக வீதியின் இருபக்கமும் அகலித்து கல்லுப்போட்டு தார் இட்டு 75ம் ஆண்டு மின்சாரம் கொண்டு வரப்பட்டது. வீதியில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த கிணற்றுக்கு பிளாற்போட்டு மதில் கட்டி பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டது. செயலாளராகச் செயல்பட்ட ஆ.சொர்ணலிங்கம் அவர்கள் இளைஞர் சேவை மன்றத்தோடு தொடர்பு ஏற்படுத்தி 1979ம் ஆண்டு நூறு மலசலகூட குழி அமைக்கும் வேலைத்திட்டம் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது. இக்காலத்தில் கிராமத்தின் சுகாதார தேவைக்கு இது இன்றியமையாது இருந்தது. இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுத்த போது நிலைய நிர்வாக்தில் இருந்து இருவர் கனடா போய்வர சந்தர்ப்பம் ஏற்பட்டது. கனடா இலங்கை இளைஞர் பரிமாற்றுதி திட்டத்தில் ஆ.சொர்ணலிங்கம் ஆ.ஜோதிராணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுக் கனடா போய் வந்தனர். இளைஞர் சேவை மற்ற நிதி ஒத்துழைப் புடன் கிராம அபிவிருத்தி சங்கக் காணியில் கிணறு ஒன்று கிராம இளைஞர்களால் வெட்டப்பட்டது. இவ்வேலைத் திட்டத்தை 82ம் ஆண்டு வைகாசி மாதம் உடுவில் பிரதேச செயலர் திரு.செபநாயகம் அவர்கள் தொடக்கி வைத்தார். இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகள், கலை கலாசார நிகழ்வுகளில் நிலைய அங்கத்தவர் கள் கலந்து பரிசில்கள் பெற்றுள்ளனர். 14.02.1981ம் திகதி சனசமூக நிலைய மண்டபத்திற்கு மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இம்மின் இணைப்பை சுன்னாகம் பட்டினசபை விசேட ஆணையாளர் தழிரு.பொ.பாலசிங்கம் அவர்கள் தொடக்கி வைத்தார். சனசமூக நிலைய நிர்வாகம் கிராமத்தல் தொழில் நிலையமொன்றை அமைக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தது. தறிமூலம் பாய் செய்யும் வேலைத் திட்டத்தை செயல்படுத்தியது.

திரு.ச.தம்பாபிள்ளை இல்லத்தில் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டது. பாய் தொழிலகம் சிறப்பாக இயங்க திருமதி கிட்டப்பா அவர்களின் ஒத்துழைப்பு நினைவு கூரத்தக்கது. நாட்டின் சூழ்நிலை காரணமாக புல்லு வெட்டிக் கொண்டுவர முடியாமையால் 83ம் ஆண்டின் பின் இவ்வேலைத்திட்டம் செயல்பட முடியாமல் போய் விட்டது.

கிராமத்தில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றின் அவசியம் உணரப்பட்டது. திரு.ஆ.சொர்ணலிங்கம் அவர்களின் முயற்சியால் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.தர்மலிங்கம் அவர்கள் பன்முகப்படுத்தல் நிதி ஒதுக்கீட்டில் முப்பதினாயிரம் ரூபாயை தொழில்பயிற்சி நிலையம் அமைக்க 1979ம் ஆண்டு ஒதுக்கித் தந்தார். சனசமூக நிலையங்களுக்குநிதி ஒதுக்கும் திட்டம் அக்காலத்தில் இல்லாததால் கிராம அபிவிருத்திச் சங்கப் பெயரில் நிதி ஒதுக்கப்பட்டது. 07.06.1980ம் திகதி கிராம அபிவிருத்திச் சங்கம் தொடங்கப்பட்டது. 08.08.1981ம் திகதி ஒரு பரப்புக் காணி தொழில் பயிற்சி நிலையம் அமைக்க சனசமூக நிலையத்தால் வாங்கப்பட்டது. காணி கிராம அபிவிருத்தி சங்கப் பெயரில் பதியப்பட்டது. தொழில் பயிற்சி நிலையம் அக்காணியில் கட்ட தொடர்ந்து முயற்சித்தும் நிதி விடுவிக்கப்படாமையால் கட்டடம் கட்ட முடியாமல் போய்விட்டது.

கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டது. சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க சார்பில் கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. சனசமூக நிலைய நிர்வாகம் இலங்கை மன்றக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு கிராம இளைஞர்கள் பலர் அங்கு பயிற்சி வகுப்புக்களில் கலந்து பயன்பெற வாய்ப்பை ஏற்படுத்தியது. சர்வோதயத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி பலர் அங்கு தங்கிப் பயிற்சிகளைப் பெற உதவியுள்ளது. மேலும் சிலர் சிங்கள மக்கள் வாழும் கிராமங்களுக்குப் போய் தங்கிப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

சனசமூக நிலைய நிர்வாகம் 1978ம் ஆண்டு தொடக்கம் சுன்னாகம் பட்டினசபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பெடுத்து செய்து வந்தது. சுன்னாகம் பட்டினசபை விசேட ஆணையாளர் திரு.பொ.பாலசிங்கம் கடமை யாற்றிய காலத்தில் இப்பகுதி வீதிகள், மற்றும் பல்வேறு வேலைகளைப் பொறுப்பெடுத்து சிறப்பாகச் செய்து உள்ளது. கிராமத்து இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தியது டன் சிறிதளவு நிதியையும் திரட்ட முடிந்தது. திரு.ஆ.மகாலிங்கம் அவர்கள் விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய காலத்திலும் ஒப்பந்த வேலைகள் தொடர்ந்து செய்யப் பட்டன.

கிராமத்து மக்களிடையே அறிவை வளர்க்க நூல் நிலையம் ஒன்றை அமைக்க 1980 பிற்பகுதியில் தீர்மானிக்கப்பட்டது. 14.01.1989ம் திகதி தைப்பொங்கல் தினமன்று நூலநிலையம் அமைக்கப்பட்டது. உடுவில் பிரதேசசெயலர் திரு.ஆ.மகாலிங்கம் அவர்கள் வருகை தந்து நூல் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் முதல் புத்தகத்தை அன்பளிப்பு செய்து பதிவு செய்து நூல் நிலையத்தைத் தொடக்கி வைத்தார். பல அன்பர்கள்


நூல்களை அன்பளிப்பு செய்தனர். ஈழப் புரட்சி அமைப்பு பல நூல்களையும் ராக்கையும் அன்பளிப்பு செய்தது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நிதி ஒதுக்கீட்டிலும் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

பாலர் பாடசாலைக்குக் கட்டடம் அமைக்க சனசமூக நிலையம் தொடர்ந்து முயற்சித்து வந்துள்ளது. ஈழவர் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செல்வநாயகம் மற்றும் முருகதாஸ் அவர்களின் முயற்சியால் 79ம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் கட்டடம் கட்ட முடியாத சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டது.

2001ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பாலர் பாடசாலை கட்டடம் கட்டப்பட்டது. எமது கிராமத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் இளைஞர் களின் நிதியுதவியுடன் 2008ம் ஆண்டு பாலர் பாடசாலை மதில், குழாய்க்கிணறு, நீர்த்தாங்கி, மலசலகூடம் அமைக்கப்பட்டது. 2016ம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலையின் முன் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டன. ஜனசக்தி சனசமூக நிலைய நிர்வாகம் எழுபத்தைந்து ஆயிரம் ரூபாவை வங்கியில் நிரந்தர வைப்பில் வைத்திருந்தது. சனசமூக நிலைய பொதுச்சபை தீர்மானத் திற்கு அமைய 31.01.1995ம் திகதி அப்பணம் எடுக்கப்பட்டது. வட்டியுடன் தொண் ணூற்றிஐயாயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி மூன்று ரூபா எழுபத்தைந்து சதம் எடுக்கப் பட்டது. இப்பணம் அண்ணமகேசர் ஆலயத்தின் கும்பாபிசேகத்திற்குக் கொடுக்கப் பட்டது.

2003ம் ஆண்டு அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம் ஆ.சொர்ணலிங்கம் ஊடாக நிலைத்துடன் தொடர்பை ஏற்படுத்தியது. அவ் அமைப்பினர் இளைஞர் பரமாற்று வேலைத்திட்டத்தில் இரு யுவதிகளை இணைத்துப் பயிற்சி வழங்க முன் வந்தனர். செல்விகள் இ.மைதிலி, அ.அமுதா ஆகியோர் திட்டத்தில் பங்குபற்றினர். மூன்றுமாதம் அம்பாந்தோட்டையில் தங்கி அங்குள்ள கிராமிய அபிவிருத்திகள் பற்றி பயிற்சி பெற்றனர். அதே காலத்தில் இரண்டு சிங்கள இன யுவதிகள் எமது கிராமத்தில் குடும்பங்களுடன் ஒன்றிணைந்து பயிற்சி பெற்றனர். அவர்கள் கிராமத்து மக்களை குழுக்களாகப் பிரித்து சேமிப்புத் திட்டத்தை முன்னெடுத்தனர். அபிவிருத்தி மன்றத்தை அமைத்து வாரந்தோறும் பத்து ரூபா சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினர். இவ்வேலைத் திட்டம் பின் செயலிழந்து போனது.

சனசமூகநிலையம் கூரை திருத்த வேண்டிய நிலையில் இருந்தது. 2015ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஐம்பதாயிரம் ரூபாவை பன்முகப்படுத்தல் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கித் தந்தார். அதனைக் கொண்டு புதிய கூரை அமைக்கப்பட்டது. 2016ம் ஆண்டு சனசமூக நிலையத்திற்கு உள்சீற் அடிக்கப்பட்டது. ஜனசக்தி சனசமூக நிலையம் ஐம்பது ஆண்டுகள் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது.



சனசமூக நிலைய விளையாட்டு அணிநடை



**සංවර්ධන පහසුකම් සැලසීමේ ශ්‍රී ලංකා මධ්‍යස්ථානය**

அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம்

Sri Lanka Centre for Development Facilitation

# ஜனசக்தி மழலைகள் கல்விப் பூங்கா

கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றை அமைக்க முயற்சி செய்யப்பட்டது. சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவு சங்க தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உடுவில் பிரதேச அமைப்பாளர் திரு.கு.வினோதன் அவர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார். அவர் சங்க சார்பில் கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றை அமைத்துத் தர முன் வந்தார். திரு.தம்பிமுத்து அவரகளின் காணியில் 1974ம் ஆண்டு பாடசாலை அமைக்கப்பட்டது. இரு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான சம்பளத்தை பலநோக்க கூட்டுறவுச் சங்கம் வழங்கி வந்தது. பாடசாலை இயங்கிய காணி வீடு கட்டத் தேவைப்பட்டதால் 84ம் ஆண்டு இடம்பெயர வேண்டியநிலையேற்பட்டது. 26.08.1984ம் திகதி பாடசாலை கட்டடம் அகற்றப்பட்டது. கிராம அபிவிருத்திச் சங்கம், பாடசாலையை சங்க காணியில் சிரமதானமாக அமைத்தது. அப்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவராக இருந்த திரு.சி.குமாரவேல் அவர்கள் சங்க நிதியில் இருந்து இரண்டாயிரம் ரூபா வழங்கியிருந்தார். 10.05.1985ம் திகதி பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஆசிரியருக்கு வழங்கிய சம்பளத்தை நிறுத்தி விட்டது. இதனால் பாடசாலையை தொடர்ந்து நடத்த முடியாத நிலையேற்பட்டது. சனசமூக நிலையம் பாலர் பாடசாலையைப் பொறுப்பெடுத்து திரு.மா.கருணைராசாவின் ஒத்துழைப்போடு சாவகச்சேரி அறவழி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டது. அறவழி அமைப்பு 05.03.1989ம் திகதி பாலர் பாடசாலையை பொறுப்பெடுத்தது. ஆசிரியருக்கான கொடுப்பனவை அறவழி அமைப்பு வழங்கி வந்தது. ஒரு ஆசிரியருக்கான வேதனத்தை சுன்னாகம் பனைதென்னைவள கூட்டுறவு சங்கம் சிலகாலம் வழங்கியது.

பாலர் பாடசாலையை நடத்த கட்டடம் ஒன்று அமைக்க தொடர்ந்து முயற்சிக்கப்பட்டு வந்தது. 1989ம் ஆண்டு ஈழவர் முன்னணி சார்பில் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வநாயகம் அவர்கள், திரு. முருகதாஸ் அவர்களின் ஒத்துழைப்புடன் ஏழு லட்சம் ரூபாவை பன்முகப்படுத்தல் நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒதுக்கித் தந்தார். பாலர் பாடசாலை யையும் தொழில் பயிற்சிக் கூடமுமாக மாடிக்கட்டடமாக கட்ட திட்டமிடப்பட்டது. கட்டடம் கட்டிய சில பொருட்களும் வாங்கப்பட்டன. இந்நிலையில் 90ல் மீண்டும் யுத்தம் தொடங்கியதால் கட்டடம் கட்டும் திட்டம் கைவிடப்பட்டது. 92ம் ஆண்டு தெரிவ செய்யப்பட்ட சனசமூக நிலைய நிர்வாகம் பாடசாலையை மீள கட்ட நடவடிக்கை எடுத்தது. பாலர் பாடசாலையின் முன்னைய பொருட்களைப் பாவித்து கட்டப்பட்டது. 01.11.1992ம் திகதி பாலர் பாடசாலைக் கட்டடம் மீண்டும் திறக்கப்பட்டது. 1995ம் ஆண்டு இடம்பெயர்வு 1996ல் மீள்வரவு. பாடசாலை பின்பு இயக்கப்பட்டது. ஆசிரியருக்கான கொடுப்பனவை பெற்றோரே வழங்கினர். 98ம் ஆண்டு சுன்னாகம் பிரதேசசபை தலைவராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த திரு.மா.செல்வராசா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அவரின் முயற்சிக்குக் காரணமாக சுன்னாகம் பிரதேசசபைக்குட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர் வேதனத்தை பிரதேசசபை நிதியில் வழங்கி வந்தார். தற்போது பாடசாலைகள் கல்வி அமைச்சின் பொறுப்பில் ஆசிரியருக்கான வேதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலைய நிர்வாகம் பாலர் பாடசாலை கட்டடம் அமைக்கத் தொடர்ந்து முயற்சி செய்து வந்தது. 2001ம் ஆண்டு சுன்னாகம் பிரதேசசபைத் தலைவராக செயல்பட்ட திரு.கமலசேகரம்(பாபு) அவர்களின் ஒத்துழைப்புடன் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பன்முகப்படுத்தல் நிதி ஒதுக்கீட்டில் இரண்டு லட்சம் ரூபாவை பாலர் பாடசாலைக் கட்டடம் அமைக்க ஒதுக்கித்தந்தார். அந்நிதியை பயன்படுத்தி தற்போதைய பாடசாலை கட்டடம் கட்டப்பட்டது.

மயிலணி வடக்கில் வசித்து சுவிஸ் நாட்டில் தற்போது வாழும் மக்கள் ஒன்றிணைந்து பாலர் பாடசாலை அபிவிருத்திக்கு 2008ம், 2009ம் ஆண்டுகளில் நிதியுதவி செய்தனர். அந்நிதியைக் கொண்டு பார் பாடசாலை காணியை சுற்றி மதில், குழாய்கிணறு, தண்ணீர்தாங்கி, மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

2016ம் ஆண்டு புனர்வாழ்வு பனரமைப்பு அமைச்சினால் முன் பள்ளியில் பூங்கா அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. அந்நிதியில் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப் பட்டுள்ளது.

பாடசாலையில் ஆண்டுதோறும் விளையாட்டு போட்டியும் மாணவர், ஆசிரியர் கௌரவிப்பும், கலைவிழாவும் நடைபெறுகின்றன. மாணவர்களுக்கான அறிவூட்டும் ஆசிரியப் பணியைக் கடந்த காலங்களில் ஆ.புவனராணி, தங்கச்சியம்மா, செ.வசந்தி, க.சுகுணா, த.தனதீஸ்வரி, க.ஜெயந்தி, ஜெவடிவாம்பிகை, க.ரேணுகா, த.பிரியா ஆகியோர் பணி புரிந்துள்ளனர்.



சிரமதான பணி குழு



முன்பள்ளி மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வின் போது

# தபாலில் தாய் இதயம்

மகனே.........!

முதியோர் இல்லத்து முற்றத்திலிருந்து
முத்தே நானுனக்கு எழுதும் கடிதம்
கருவில் நீ வந்த கணத்தில் இருந்து
கருமணியாய் போற்றிய பொக்கிஷப் பொழுதுகள்

வயிற்றில் நீயுதைக்க கல் சுமந்தேன் நானும்
உதைக்கும் கணந்தோறும் கல் அழுத்திய காயம் மறந்தேன்
பூமி வரும் நாளில் வேதனையை நான் ரசித்தேன்
மார்போடு உனையணைத்து மனம்வேகும் காயம் மறந்தேன்

பள்ளி வாசல் வரை உனைச் சுமந்து சென்றேன்
படுத்துறங்கும் உனதழகை என் கண்ணீரில் படம் வரைந்தேன்
பேசும் மொழிகளை இதயத்தில் பதிவிறக்கம் செய்தேன்
பேசாத மொழிகளையும் நான் புரிந்து கொண்டேன்

சாதம் வடித்து வைத்து வாசலில் காத்திருந்தேன் - நீ
சாப்பிட்ட தட்டினைக் கழுவி என்முகம் பார்த்துப் பசி மறந்தேன்
வாடிய வடிவழகைப் பார்த்தால் வாடிடும் என்னுள்ளம்
வாடா மகனேயென்று மடிமீது உறங்க வைப்பேன்

சின்னவன் நீயென்று நான் கருதும்நேரம்
சிறுமீசை அரும்ப நாணத்தோடு நெளிந்தாய்
கூடாத கூட்டத்தோடு கூடிவிட்டாயென்று
கும்பிட்டு அழுதேனே சாமியின் பாதத்தில்

மகனுக்கு மகன் வந்தான் என்மடி விளையாட
மண் தொட்ட கையாலே மகனைத் தொடாதே
"மனைதனை விட்டு புறப்படு கிழவி " என்று நீயுரைத்தாய்
மகனே நலமா.........? கேட்கும் தூரம் நானில்லை

"வீட்டுக்கு நேரத்துக்கு வாறியா.....?" தெரியவில்லை
"பெட்டகத்தில் அரிசிமணியிருக்கா......?" தெரியவில்லை
"மகனே மார்போடு இருந்த காயம் மாறிவிட்டுதோ.....?"
மருமகள் பேசுகிறாளா.....? உன் தாய்க்குச் சொல்லிவிடு

இருநூறு ரூபாயிருக்கு வந்து வாங்கிச் செல் - இங்கு
இரவுக்கு இறைச்சியாம் வா தம்பி சாப்பிட ஒரு பிடி தாறன்
காலையில் கடும் குளிரப்பா, போர்த்துப் படுத்திரு
காகம் கரையுது கண்ட கனவு சரியில்லை நலத்தோடு நீயிரு

இல்லத்தில் நித்தம் குளிக்கின்றேன் புதுச்சேலை கட்டுறன்
இனிப் பேரனைக் கூட்டி வா முந்தானை முடிச்சில் இனிப்பிருக்கு
என்மடியில் பேரனோடு நீயும் உறங்க தாலாட்டுப் பாட வேண்டும் - இங்கு
என்னத்தை சொல்ல தொலைபேசி இருக்கு பேசத் தெரியவில்லை உதறுதடா

பிழையில்லை உன்னில் நீயென் குழந்தையடா
பிற்காலம் வரும் அம்மாவைப் பாரென்று
சொல்லித்தர மறந்தேன்
நீயென்ன செய்வாயப்'பா உன் காலம் சரியில்லை
நிறுத்துகின்றேன் மடலை சோற்றுக்கு மணியடிக்கின்றது

என்றும் உன் அம்மா- **பவளம்-**

(ஸ்ரீலேக்கா பேரின்பகமார் அரசஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் தேசிய ரீதியாக முதலாம் இடம பெற்றது.)

குறிப்பு: இவர் பட்டதாரி ஆசிரியர், சிறுவர் கதைகள், நாடகம், சிறுகதைகள் இயற்றியவர். இலக்கியத்தில் பல பரிசில்கள் பெற்றவர்.

# பெண்வேண்டும் வினா?

தாயாய் தாரமாய் தங்கையாய்
தரணியில் தாங்கும் வகிபாகம்
எத்தனை எத்தனை எண்ணிலடங்கா
அத்தனையும் அவள் உருவாகும்
மொத்தமாய் சொல்லிடில் பெண்ணின்
பெருந்தன்மை பேசிட பல நாள் போகும்
துன்பத்தைத் தாங்கிடும் சுமை தாங்கியாய்
இன்பத்தை சுரக்கும் சுரபியாய்
அன்பை வழங்கும் வள்ளலாய்
பொறுமையில் பூமித்தாயாய்
வறுமையிலும் செம்மையாய்
வளத்திலும் வள்ளிசாய்
வாழ்ந்திடும் பெண்மையை
வசைபாடும் ஓர் தனி உலகம்
மலடி என்றும் விதவை என்றும்
முள்முடி பட்டங்கள்
வாயாடி என்றும் வாழாவெட்டி என்றும்
வண்ணப் பெயர் அடைமொழிகள்
மங்கையராய் பிறக்க மாதவம் செய்திட
வேண்டுமெனும் பேச்சு
மலையேறிப்போய்க் கனகாலமாச்சு
செந்தண நெருப்பில் வெந்திடும் விறகாய்
மங்கையர் வாழ்வது மாருது பூமியில்
பெண் விடுதலை எனும் பேச்சு
வீணர் பேச்சாய்ப் போனது இங்கே
கல்வியில் மேன்மை காணினும் அவள்
கண்ணீரில் வாழ்க்கை என்றாச்சு
குற்றங்கள் மலியும் கலியுகமதில்
குழந்தையும் பெண் எனும் பாவம் பண்ணியதோ
கொற்றங்கள் சூழும் நாட்டிலும் பெரும்
கொடுமைகள் பெண்கள் கொண்டார்
வெற்றிகள் சூழுமோ, விடுதலை காணுமோ
வனிதையர் வாழ்வினி மேதினி மீதினிலே
மேன்மை கொள்ள ஒரு வேளை வருமோ
பதில் யார் மொழியோ?

**- சிறீதரன் பரணிகா** - சங்க உறுப்பினர்

# யாதுமாகி யாவையுமாய்....

பெண்மை அவள்
தாயுமாகித் தாரமுமாய்
தங்கை தமக்கை எனப்
பூவுலக தேவதையாய்
பூத்த பூமகளாயானவளே

பெற்றெடுத்த தன்
உயிரை உச்சி முகர்ந்து
வளர்த்தெடுத்து பெரும் வெற்றி
காணயிலே
ஓரமாய் தான் அமர்ந்து
பிறர் புகழ் தன் சேய்சேர
கண்ணோரம் நீர் பெருகி
மனமாறி வாழ்த்திசைப்பாள்

தாலியேற்று தாரமாகி
தன் கணவன் தோள் சாய்ந்து
வந்த துயர் அத்தனையும்
வென்று விட்டுப் புன்னகையால்
கொள்ளையின்பம் மனைக்களித்த
முழுமதியாய் ஆனவளே

ஆணவன் பிஞ்சுவிரல்
தொடுகையிலே தாயானாள்
மஞ்சள் மாலையிடுகையிலே
மனையாளானாள், நரைமுடி நாட்டியமாடித்
தொடர்கையிலே சேயானாள்
யாதுமாகி யாவையுமாய்
பூவுலக தேவதையானாள்
பெண்மையவள்

- ஜெ.பாரதி -



# நன்றிக்கான நிமிடங்கள்

ஜனசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க பொதுச்சபை தீர்மானத்திற்க மைய சங்கத்தின் 25வது ஆண்டு நிறைவையொட்டி வெள்ளிவிழா மலர் வெளியிடப்படுகின்றது.

இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கிய வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி மதுமதி வசந்தகுமார் அவர்கட்கும், யாழ் மாவட்ட அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ. மோகன் அவர்கட்கும், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் திரு.செ.இலகுநாதன் அவர்கட்கும், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.பா.பாலரவி அவர்கட்கும், யாழ்.மாவட்ட சி.க.வ.கூ.ச சமாச செயலாளர் திருமதி ஜெ.கனகாம்பிகை அவர்கட்கும், கிராமஅலுவலர் திருமதி பி.சுஜந்தி அவர்கட்கும், யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாச வெளிக்கள அலுவலர் திருமதி கௌரிதேவி அவர்கட்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் ஆக்கங்கள் வழங்கி உதவிய யாழ்.மாவட்ட சி.க.வ.கூ.ச.சமாச கல்வி உத்தியோகத்தர் திரு.கோ. கௌரிதாசன் அவர்கட்கும், திருமதி ரா.மைதிலி அவர்கட்கும், திருமதி பே.லேகா அவர்கட்கும், ச.பரணிகா அவர்கட்கும், ஜெ.பாரதி அவர்கட்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இம்மலரை சிறப்புற அச்சிட்டு வழங்கிய சுன்னாகம், முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத் தினருக்கும் எமது நன்றிகள்.

– நன்றி –

மயிலணி,
சுன்னாகம்.

**ஜனசக்தி**
**சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்**

## யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# சான்றுப் பத்திரம்

சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களிடையே 2014ம் ஆண்டின் செயல்திறன் அடிப்படையில் யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் யாழ் மாவட்டத்தில் சிறந்த சங்கமாக தெரிவு செய்யப்பட்ட உடுவில்ப் பிராந்திய மயிலணி வடக்கு ஜனசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தைப் பாராட்டி இச்சான்றுப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

Co - op

தலைவர்
யா.மா.சி.க.கூ.ச.சமாசம்

கூ.அ.உ.ஆணையாளர்
யாழ்ப்பாணம்

செயலாளர்
யா.மா.சி.க.கூ.ச.சமாசம்




முத்து பிறின்டேர்ஸ். சுன்னாகம். 077 8038629